பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 12, திங்கட்கிழமை 28.08.2017 கதிர் 295

வித்தியா கொலை வழக்கு

## எதிரித் தரப்பு சாட்சியம் இன்று தொடக்கம் பதிவு

யாழ்ப்பாணம், ஓக.28

புங்குடுதீவு, மாணவி படு கொலை வழக்கில் எதிரித் தரப்பின் சாட்சியங்களை 'ட்ரயல் – அட்பார்' நீதிமன்றம் இன்று முதல் பதிவு செய்யவிருக்கின்றது.

கடந்த 4 ஆம் திகதியுடன் வழக்குத் தொடுநர் தரப்பு சாட்சியங்கள் முடிவுறுத்தப்படுகின்றன பக்கம் 18 »

## ஜெனீவாத் தீர்மான விவகாரம்:

# இலங்கையின் போக்கினால் சர்வதேச சமூகம் ஏமாற்றம்!

## ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி தெரிவிப்பு



கொழும்பு, ஓகஸ்ட் 28

**ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 18 மாதங்கள் கழிந்தும், இலங்கை அரசாங்கம் எந்த முன்னேற்றத்தையும் செயலில் காண்பிக்கவில்லை என்பது அனைத்துலக சமூகத்தை ஏமாற்றமடையச் செய்துள்ளது என்று இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின், இராஜதந்திர விவகாரங்களுக்கான பிரதிநிதி போல் கொட்பிறி (Paul Godfrey)தெரிவித்துள்ளார்.**

"இலங்கை அரசாங்கம் கூடிய விரைவில் சிறப்பு நீதிமன்றம் ஒன்றையோ, நீதிப்பொறிமுறையையோ அமைப்பதற்கானவாய்ப்பு எதுவும் தென்படவில்லை.

"தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 18 மாதங்கள் கழிந்தும், இலங்கை அரசாங்கம் எந்த முன்னேற்றத்தையும் காண்பிக்கவில்லை பக்கம் 18 »

## பெங்களூரு வரை பயணித்த ரணிலால் மூகாம்பிகையைத் தரிசிக்க முடியவில்லை!



பெங்களூரு, ஓக.28

இந்தியாவின் கர்நாடக மாநிலம், உடுப்பியில் உள்ள மூகாம்பிகை அம்மன் ஆலயத் தரிசனத்துக்காக பெங்களூரு வரைப் பயணம் செய்த இலங்கைப் பிரதமர் ரணிலினால் கோயிலுக்குச் செல்ல முடியவில்லை.

பெங்களூரு நகரில் இருந்து உடுப்பி வரை ஹெலிக்கொப்டரில் பயணம் செய்யவிருந்தார் பிரதமர் ரணில், ஆனால் காலநிலை சரியில்லாததால் அவரால் அந்தப் பயணத்தைச் செய்யமுடிய பக்கம் 18 »

## புலமைப்பரிசில் பெறுபேறுகள் ஒக்டோபர் 5 இல்

கொழும்பு, ஓக.28

தரம் 5 புலமைப் பரீட்சைப் பெறுபேறுகளை இம்முறை ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதி வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேபோல் அதற்கான வெட்டுப்புள்ளிகளை எதிர் வரும் டிசெம்பர் மாதம் பக்கம் 18 »

## ரெலோவின் அமைச்சுப் பதவிச் சர்ச்சை: 16ஆம் திகதி கூடுகிறது அமைப்புக் குழு

### குணசீலன் விவகாரம் பிய்த்து உதறப்படலாம்

கொழும்பு,ஒக் 28

ரெலோவின் அரசியல் குழுவும் அமைப்புக் குழுவும் பரிந்துரை செய்த அக் கட்சி உறுப்பினரை விடுத்து பிறிதொரு உறுப்பினர் அக் கட்சியின் சார்பிலான அமைச்சராக வடக்கு மாகாண சபையில் நியமிக்கப்பட்டிருக்கின்றமை உள்ளடங்கலாக பல்வேறு முக்கிய பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக அக்கட்சியின் அமைப்புக் குழு எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியாவில் கூடுகின்றது.

இக்கூட்டத்துக்கான அழைப்பு அனுப்பட்டிருக்கின்றமை பக்கம் 18 »

## போலிக் காரணங்களைக் கைவிட்டு இனியாவது தேர்தலை நடத்துங்கள்!

### அரசை வலியுறுத்துகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஓக.28

"உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைப்பதற்குஇனியும்போலியான காரணங்களைத் தேடாதீர்கள்.

"உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டது. இனியும் காலத்தை இழுத்தடிக்காமல் இந்த வருட இறுதிக்குள் இந்தத் தேர்தலை நடத்துங்கள்."

– இவ்வாறு அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட் பக்கம் 18 »


## இலங்கைக் கடற் பாதுகாப்புக்காக இந்தியாவிடம் இருந்து கப்பல்கள்

### கடற்படைத் தளபதி சின்னையா ஏற்பாடு

கொழும்பு, ஓக.28

இலங்கைக் கடற் பாதுகாப்புக்காக இந்தியாவிடம் இருந்து கப்பல்களை வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என இலங்கைக்கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையாவை மேற்கோள் காட்டி இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. பக்கம் 18 »

அளப்பு அருணாசலம்



அப்ப... உவர் சமல் பேதி குடுக்கிறார் போல...!

## ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை வழங்குவதா? ஆராய இங்கு வருகிறது ஐரோப்பிய குழு

கொழும்பு, ஓக.28

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கைக்கு வழங்குவது குறித்த இறுதி அனுமதிவழங்கப்படுவதற்கு முன்னர், இங்குள்ள நிலைவரத்தை நேரில் கண்டறிந்து ஆராய்தற்காக ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த நிபுணர்கள் குழு ஒன்று இலங்கை வரவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த ஐந்து நிபுணர்கள் இது தொடர்பாக இலங்கையின் தற்போதைய நிலைமையை ஆராயும் நோக்கில் பிரசல்ஸில் இருந்து வருகை தரவுள்ளனர். அடுத்த மாதம் ஐந்தாம் திகதியில் இருந்து 13 பக்கம் 18 »

## சிறைச்சாலை பஸ் புரண்டதில் சிறை அதிகாரி ஒருவர் மரணம்

அம்பாறை,ஓக.28

அம்பாறை தெய்யத்தகண்டிய பிரதேசத்தில் குடாஓயா பாலத்திற்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாலத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்து திடீரென புரண்டு விழுந்ததில், சிறைச்சாலை அதிகாரி அதில் சிக்குண்டு உயிரிழந்துள்ளார். பக்கம் 18 »

## ஏழு எம்.பிக்களை நீக்க தயாராகின்றது சு.க.?

கொழும்பு, ஓக.28

கட்சியின் யாப்பை மீறிய குற்றச்சாட்டுக்கு அமைவாக அடுத்த வாரம் சிறிலங்கா சுதந்திர கட்சியின் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமையை இரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு உறுப்புரிமை பக்கம் 18 »

## எதிர்காலச் சந்ததி ஆயுதம் ஏந்தும் நிலை வரலாம்!

### சமல் ராஜபக்ஷ எச்சரிக்கை



கொழும்பு, ஓக.28

நாட்டின் தற்போதைய போக்கைப் பார்க்கும்போது, எதிர்காலச் சந்ததி மீண்டும் ஆயுதம் ஏந்தவேண்டிய நிலை வரும் என முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தங்காலையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு பக்கம் 18 »

## பருத்தித்துறை – மயிலிட்டித்துறை பாதையில் படைப் பாதுகாப்புடன் பயணிக்கலாமாம்!

யாழ்ப்பாணம்,ஓக.28

மயிலிட்டித் துறைமுகத்திற்குப் பருத்தித்துறையில் இருந்து பொதுமக்கள் வந்து செல்வதற்கு ஏதுவாக, பருத்தித்துறை – பொன்னாலை வீதியை மக்கள் பயன்பாட்டுக்கு அனுமதிக்க இராணுவத்தினர் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று யாழ். மாவட்டச் செயலாளர் வேதநாயகன் தகவல் வெளியிட்டுள்ளார் பக்கம் 18 »

## பேருந்துத் தரிப்பிடத்தில் நின்றவர் மீது உழவியந்திரத்தில் வந்தவர் வாள்வெட்டு

### கிளிநொச்சி கோணாவில் பகுதியில் சம்பவம்

கிளிநொச்சி, ஓக.28

பேருந்துத் தரிப்பிடத்தில் நின்றவர் மீது உழவியந்திரத்தில் வந்த ஒருவர் வாள்வெட்டுத்தாக்குதலை மேற்கொண்டதில் அவர் படுகாயமடைந்தார்.

கிளிநொச்சி – கோணாவில் பகுதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற இந்த வாள்வெட்டு சம்பவத்தில் கிளிநொச்சி காந்தி கிராமத்தைச் பக்கம் 18 »

# வடமாகாண அரச தாதியர்கள் நாளை செவ்வாய் பணிபுறக்கணிப்பு

வடமாகாண அரச தாதிய உத்தியோக சங்கம் சில கோரிக்கைகளை முன்வைத்து ஒருநாள் வேலை நிறுத்தத்தை நாளை செவ்வாய்க்கிழமை மேற் கொள்ளவுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பிய கடிதத்தில் தெரி வித்துள்ளது.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

TA/G/PSM/13/2016 ஆம் இலக்க 02.06.2017 ஆம் திகதிய சுற்றுநிருபம் மூலம் வெளியிடப்பட்ட புதிய மேலதிக நேரக் கொடுப்பனவை நடைமுறைப்படுத்தாமை மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவின் நிலு வையை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை மற்றும் தாதிய உத்தியோகத்தர்களது பதவி உயர்வின் போதான மேலதிக நேரக் கொடுப்பனவு நிலுவையை வழங்காமை போன்ற கோரிக்கையை முன் வைத்தே இந்த வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளவுள்ளோம்.

தாதிய உத்தியோகத்தர்களது கொடுப்பனவு சம்பந்தமான மற்றும் ஏனைய விடயங்களிலும் நடைமுறைப் படுத்தலில் தோல்வியடைந்த மாகாணமாக வடமாகாணமே உள்ளது என்பதனை தங்களுக் குத் தெரிவிப்பதோடு இது வடமாகாண சுகாதார அமைச்சின் கீழ் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்களது தொழில்துறையை கடுமையாகப் பாதிக்கின்ற செயற்பாடாகவே உள்ளது என்பதையும் சுட்டிக் காட்டுகின்றோம்.

இந்த ஒருநாள் வேலை நிறுத்தமானது 29.08.2017 மு.ப 7.00 தொடக்கம் 30.08.2017 மு.ப வரை நடைபெறும் என்பதையும் நோயாளர்களினதும், பொது மக்களினதும் நன்மை கருதி வேலை நிறுத்தத்தின் போது உயிர் காப்பு நடவடிக்கைக்கான அவசர சிகிச்சைக்கு மாத்திரம் தாதிய உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுவார்கள் என்பதையும் தங்களுக்கு அறியத் தருகின்றோம்.

இவ் வேலை நிறுத்தத்தால் நோயாளர்களுக்கு ஏற்படும் பாதிப்பிற்கு வடமாகாண சுகாதார அமைச்சும் வடமாகாணசபை நிர்வாக முமே முழுமையான பொறுப்பு என்பதையும் அறியத்தருகிறோம்.- என மேலும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ)


## இலங்கைக்கு நேரில் மேலே உச்சத்துக்கு வந்தது சூரியன்

### ஆறாம் திகதி வரை நிற்குமாம்

கொழும்பு, ஓக.28

நேற்று முதல் எதிர்வரும் 6ஆம் திகதி வரை சூரியன் இலங்கைக்கு நேராக உச்சம் கொடுக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று மதியம் 12.12 மணியளவில் கோவிலான்முனை, சங்கானை, மூளாய், மல்லாகம் மற்றும் வரணி ஆகிய பகுதிக்கு மிக அருகில் சூரியன் உச்சம் கொடுத்தது.



இதேவேளை நாட்டின் ஊடாக மணிக்கு 40 - 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக் கூடும் எனவும் வளிமண்டலவியல்திணைக் களம் குறிப்பிட்டுள்ளது.

விசேடமாக ஊவா, வடமத்திய, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும், அம்பாறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் கடும் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதாக அந்தத் திணைக்களம் விடுத்துள்ள வானிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று அனுராதபுரம் 35, திருமலை 34, யாழ்ப்பாணம் 33, கொழும்பு 31 பாகை செல்ஷியஸ் வெப்பநிலை காணப்படும் என நேற்றுக் காலையில் எதிர்பார்க்கப்பட்டது.

## விஜயதாஸவை கட்சி விலக்கவில்லை; பதவியிலிருந்தே விரட்டி அடித்தது!

### இப்படிக் காட்டமாக கூறுகிறார் சரத் பொன்சேகா

கொழும்பு, ஓக.28

''முன்னாள் நீதி அமைச்சராகவிருந்த விஜயதாஸ ராஜபக்ஷ தான் பதவி விலகவில்லை என்றும், தன்னை விலக்கிவிட்டார்கள் எனவும் கூறிக் கொள்கிறார். விலக்கிவிட்டார்கள் என்பது கௌரவமாக இருக்கும் என்று அவர் நினைக்கிறார் போலும். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு அவரின் உண்மை முகம் தெரியவந்த காரணத்தால் அவரை விரட்டியடித்து விட்டார்கள் என்பதே உண்மையாகும்'' என அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

களனி பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

''முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸவின் செயற்பாடுகளை ஐக்கிய தேசியக் கட்சியினர் அனைவரும் முழுமையாக நிராகரித்தார்கள்.



''அவர் முன்பிருந்தே இவ்வாறான முறையற்ற செயற்பாடுகளையே முன்னெடுத்து வருகின்றார் என்பதை நான் நன்கு அறிவுறுத்தியிருந்தேன்.

''நான் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளும் முன்னரேயே இவ்வாறான ஒரு விடயம் குறித்து நான் கட்சியினருக்குத் தெளிவுபடுத்தியிருந்தேன். இவ்வாறான நிலையிலேயே அவருக்கு கட்சியில் எதிர்ப்பு கிளம்பியது.

அதேபோல் அவர் நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவுடன் பெல்லங்வில விகாரையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்தார். இதன் மூலம் அவர் முன்னாள் ஜனாதிபதியுடன் கூட்டாக செயற்பாடுகளை முன்னெடுத்து வந்துள்ளார் என்பதை மக்கள் அறிந்து கொண்டுள்ளனர்.

''அதனால் அவர் மீது கடந்த காலங்களில் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை மக்கள் தற்பொழுது ஆதாரத்துடனே கண்டுகொண்டுள்ளார்கள்.'' - என்றார்.

(உ)

## மோட்டார் சைக்கிள் ஓட்டுநருக்கு ரூ. 1 லட்சத்து 20 ஆயிரம் தண்டம்!

கொழும்பு, ஓக.28

பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் மோட்டார் சைக்கிள் ஓட்டிய ஒருவருக்கு முதல் முறையாக அதிகூடிய அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா அபராதமாகச் செலுத்துமாறு அந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநருக்கு பலபிட்டிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கை வரலாற்றில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ஒருவருக்கு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட அதிகூடிய அபராதம் இதுவென கருதப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளின் இலக்க எண்ணை மாற்றியது, சைலன்ஸர் பீப்பாயை மாற்றி அதிக சத்தத்தில் பயணித்தமை, போலி இலக்கத் தகடு



பயன்படுத்தியமை போன்ற காரணங்களுக்காக இந்த மோட்டார் சைக்கிள் பட்டபொல பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டிருந்தது.

(உ)

## மேலும் இரு ஐ.தே.க. அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை!

### தயாராகின்றனர் கூட்டு எதிர்க்கட்சியினர்

கொழும்பு, ஓக.28

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் மேலும் இரண்டு அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைக் கொண்டுவர கூட்டு எதிரணியினர் தீர்மானித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட இரு அமைச்சர்களின் அமைச்சுக்களில் இடம் பெற்றவை எனக் கூறப்படும் ஊழல், மோசடிகள் தொடர்பில் இந்த அமைச்சர்களுக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவம் செய்யும் இரண்டு அமைச்சர்களுக்கு எதிராகவே கொண்டுவரப்படவுள்ளன எனவும் இந்த அமைச்சர்கள்தொடர்பில் லஞ்ச, ஊழல் மோசடி தவிர்ப்புப் பிரிவினருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வுகளின் போது நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டு சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் அந்தப் பிரேரணைகள் ஒப்படைக்கப்படும் எனக் கூட்டு எதிரணியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ)

## முன்னாள் அமைச்சர் சத்தியலிங்கம் தெரிவிப்பு;

# வவுனியாவில் புதிய பேருந்து நிலையம் திறப்பதில் பல நெருக்கடிகள் இருக்கும்

## மாகாணத் திணைக்களத்தின் செயற்பாடுகள் கேள்விக்குள்ளாகுமா?

வவுனியா புதிய பேருந்து நிலையம் திறப்பத்தில் மாகாண போக்குவரத்து திணைக்களத்தின் செயற்பாடு கேள்விக்குள்ளாகும் என வட மாகாணசபை உறுப்பினரும்முன்னாள்மாகாண சுகாதார அமைச்சருமான ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர் –

வவுனியா நகரத்தில் அரச பேருந்து சேவைக்கு பேருந்து நிலையம் இருந்தபோதிலும் தனியார்தங்களுடைய பேருந்துகளை வீதியோரத்தில் நிறுத்திச் சேவையில் ஈடபட்டனர். அந்த சாரதிகள், நடத்துனர்களுக்கு மலசலம் கழிப்பதற்கு கூட வசதியற்ற நிலையே காணப்பட்டது.

இதனால் புதிய பேருந்து நிலையத்தைபலஎதிர்ப்புகளுக்கு மத்தியில் குறித்த இடத்தில் அமைத்தனர். அக் காலத்தில் புதிதாக மாகாணசபை உருவாக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் பேருந்துநிலையத்தை அமைக்க எத்தனித்தபோதே முதலமைச்சர் மற்றும் போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரனின் உருவப்படங்கள்பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் கொழும்பில் ஒட்டப்பட்டிருந்தன. இந்த மாகாணத்தில் மாகாணசபை இருக்கின்ற போதுகூட அந்த மாகாண சபைக்கு அறிவிக்காமல் மிக வேகமாக பேருந்து நிலையத்தை அமைப்பதற்குரிய அடிக்கல்லை நாட்டினார்கள்.

யாருடைய விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் இதனை கட்டினார்களோ இன்று அது பாவனையின்றி காணப்படுகின்றமை வேதனைக்குரிய விடயம்.

எனது அமைச்சுக்கு அப்பாற்பட்ட விடயமாக இருந்தாலும் கூட இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற வகையில் இந்தப் பேருந்து நிலையத்தைத் திறப்பதற்குநானும்என்னாலான அனைத்து முயற்சிகளையும் எடுத்திருந்தேன்.

இதற்குமப்பால் அரச அதிபர் தலைமையில் கூட்டப்பட்ட கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் அரசபேருந்து சேவையாளர் சங்கம் அல்லது அத்திணைக்களம் இன்றும் இடையூறாக இருக்கின்றது.

இந் நிலையில் அங்கிருந்து சேவையை ஆரம்பிக்க வேண்டுமாயின் கூட மீண்டும் திருத்தம் செய்தே போகவேண்டிய நிலைக்கு அக்கட்டடம் சென்று கொண்டிருக்கின்றது.

மாகாணசபை செல்லும் நிலையில்வடமாகாணப்போக்குவரத்துத் திணைக்களம் எந்த நிலையில் உங்களுக்கு உதவப் போகின்றது என்பது கேள்வி நிறைந்ததாகவே உள்ளது. – என தெரிவித்தார்.

19 கோடி 50 லட்சம் ரூபா செலவில்வவுனியாவில்அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையம் கடந்த ஜனவரி 16 ஆம் திகதி திறக்கப்பட்ட போதும் இன்று வரை அது செயற்படாமல் மூடப்பட்டே உள்ளது. (உ–100)

## வர்த்தக நிலையத்தில் தீ, இளம் பெண் படுகாயம்

கிளிநொச்சி, ஓக. 28

கிளிநொச்சி – கிருஷ்ணபுரம் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் நேற்று பிற்பகல் ஏற்பட்ட தீ விபத்தில் இளம் குடும்பப் பெண் ஒருவர் தீக்காயங்களுக்கு உள்ளானார்.

அவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது இந்தத் தீ விபத்து ஏற்பட்டது. வேகமாக பரவிய தீயினால் கடையில் இருந்த பொருட்கள் முழுமையாக தீக்கிரையானதுடன், வீட்டு பாவனை பொருட்கள் உள்ளிட்டவையும் தீக்கிரையாகின.

சம்பவத்தில் படுகாயமடைந்த குறித்த இளம் பெண் அயலவர்களின் உதவியுடன் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

தீ பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது, இந்த திடீர் தீ விபத்துக் கான காரணம் என்ன என்பது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுவருகின்றனர். (ம)

## மாணவர் கல்விக்கும் நிதி உதவி பஸ் உரிமையாளர்கள் வழங்கினர்

வவுனியா, ஓக. 28

வவவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் மூன்று லட்சம் ரூபாய் நிதியை வழங்கியது.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக வறுமைக் கோட்டுக்குட்பட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் 10 பேர் வீதம் தெரிவு செய்பட்டு 30 மாணவர்களுக்கு இந்த உதவி வழங்கப்பட்டது.

வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமூக சேவையின் ஒரு கட்டமாக இந்த உதவித் திட்டம் வழங்கப்பட்டது. இச் சங்கத்தின்19ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு ஒவ்வொரு மாணவர்களினதும் பெயரில் வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு அதில் 10 ஆயிரம் ரூபாய் வீதம் வைப்புச் செய்து கொடுக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவர் எஸ். இராஜேஸ்வரன் தலைமையில் வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நடைபெற்ற நிகழ்வில் இவ் வங்கிக் கணக்குப் புத்தகங்களை வடமாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராசா, முன்னாள்மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரேஸ்குமார், சங்க உறுப்பினர்கள் வழங்கி வைத்தனர். (உ–100)

## தனியார் பஸ் உரிமையாளர்களின் வவுனியா மாவட்டச் சங்கஒன்றுகூடல்






வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் 19வது வருடாந்த பொதுக் கூட்டம் நேற்றுமுன்தினம் வவுனியாவில் உள்ள றோயல் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

வவுனியா மாவட்டத்தில் கடந்த 19 வருட காலமாக இயங்கி வரும் இந்தச் சங்கமானது சமூக மட்டத்திலும் பல்வேறு சேவைகளைஆற்றிவருவதுடன், பஸ் உரிமையாளர்களுக்கான பங்கு இலாபத்தையும் வழங்கி வருகின்றது. இந்தஒன்கூடலிலும் கடந்த வருடத்தில் கிடைக்கப்பெற்ற 34 லட்சம் ரூபா பங்கு இலாபம் உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், புதிய நிர்வாகத்தெரிவும் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்க தலைவர் எஸ்.இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ஜி.ரி.லிங்கநாதன். தியாகராஜா, முன்னாள்வடமாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரேஸ்குமார், முன்னாள் வவுனியா நகர சபை உபநகர பிதா சந்திரகுலசிங்கம் மற்றும் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (உ–100)

## வேம்பிராய் சத்தியஞானகோட்டத்தில் உண்ணீர் சொருவிக்கும் சிறப்பு வழிபாடு

### நாளையும் மறுநாளும் இடம்பெறும்

கொடிகாமம், மீசாலை வடக்கு வேம்பிராயில் சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானகோட்டத்தில் நாளை செவ்வாய்க்கிழமை உண்ணீர் சொருவிக்கும் சிறப்பு வழிபாடும் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க மாநாடும் ஆரம்பமாகின்றன.

உண்ணீர் சொருவிக்கும் சிறப்பு வழிபாட்டுச்செயற்பாடு(குடமுழுக்குச் செயற்பாடு) இடம் பெறவுள்ளது. மறுநாள் புதன்கிழமை மாலை வேளைகளில் திருவருட்பா ஓதுதல், ஜோதி வழிபாடு என்பன இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து முதலாம், 2ஆம், 3ஆம் தினங்களில் உயிர் இரக்கத்தை வலியுறுத்தும் வகையில் சர்வதேச ரீதியான மாநாடு இடம் பெறவுள்ளது.

இங்கு நடைபெறுகின்ற மாநாட்டில் கலந்துகொள்வதற்காக உலகத்தின் பல பாகங்களில் இருந்தும் அன்பர்களும், அறிஞர்களும் வருகை தரவுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இசைக் கலைப் பீடம் என்பன கலந்துகொள்ள, ஆன்மீக உரைகள் ஏனைய கலை நிகழ்வுகள், திருவருட்பா இசை நிகழ்வுகள், நாட்டிய நாடக நிகழ்வுகள், மாற்றுவலுவுள்ளோரது பட்டிமன்ற நிகழ்வுகள், இசை நிகழ்வுகள் என்பனவும் நடைபெறவுள்ளன.

வெவ்வேறு தினங்களில் இந்தியா, மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த அறி ஞர் பெருமக்கள் மாநாட்டுக்குத் தலைமை தாங்கவுள்ளனர். இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் ஆறுமுகம் நடராஜன், பேராசிரியர் திருமதி டாக்டர் இரா.மலர்விழி மங்கையற்கரசி, திருமதி குகஸ்ரீ அண்ணாமலை அன்னபூரணி முதலான அறிஞர் பெருமக்கள் கலந்து கொள்கின்ற இம்மாநாடு மேற்படி சத்திய ஞான கோட்டத்தின் பொறுப்பாளர் கனகசபாபதி கேதீஸ்வரனின் ஒழுங்குபடுத்தலிலும் வழிகாட்டல்களிலும் இடம் பெறவுள்ளது. (இ)

## வடமாகாண விவசாய அமைச்சரின் முதல் மக்கள் சந்திப்பு முல்லையில்

### மக்கள் வரபேற்பளித்து வாழ்த்தினர்

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச மக்களை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

முத்துஜயன்கட்டு இடதுகரை பொதுநோக்கு மண்டபத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. சிவநேசன் விவசாய அமைச்சராகப்பொறுப்பேற்றதன்பின்னர் அவரது முதலாவது மக்கள் சந்திப்பாக இது அமைந்தது,

முத்துஜயன்கட்டு விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் இணைந்து இந்தச் சந்திப்பை ஒழுங்குபடுத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படிச் சந்திப்பின்போது மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன.



அத்துடன், அமைச்சராகப் பதவியேற்றுக்கொண்ட சிவநேசனுக்கு மக்கள் சிறப்பாக வரவேற்பளித்து வாழ்த்துக்களையும் கூறினர். (ம–81)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தொடருமா நல்லாட்சி?

நல்லாட்சி அரசின் தேன்நிலவுக் காலம் நேரத்துடன் முடிந்து விடுமோ எனச் சிந்திக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சேர்ந்து நல்லாட்சி அரசை அமைப்பது தொடர்பாகச் செய்துகொண்ட ஒப்பந்தம் இந்த ஆண்டு இறுதிவரை செல்லுபடியாகும்.

அது முடிவுறும் சமயத்தில் இரு கட்சிகளினதும் மத்திய குழுக்கள் கூடி, அந்த இணக்கத்தை நீடிப்பதா, இல்லையா என்பது குறித்து அப்போது தீர்மானித்துக் கொள்ளலாம் என அரசுத் தரப்பில் கூறப்படுகின்றது.

ஆட்சித் தலைவரும், சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவும், பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவும் இப்படித்தான் கூறுகின்றார்கள். ஆனால், அவர்கள் எதிர்பார்க்கும் காலத்துக்கு முன்னரே -இந்த ஆண்டு இறுதிக்கு முன்னராகவே - நல்லாட்சி குலைந்துவிடும் என்பது போலவே தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இரு தரப்பிலும் அமைச்சர்கள் மட்டத்திலேயே மோதிக் கொள்ளும் நிலைமை - ஒருவரை ஒருவர் காலை வாரி இழுத்துவிடும் போக்கு - துலாம்பரமாகத் தென்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரையில் குழப்பங்கள் குறைவு. குழப்பங்கள், முரண்பாடுகள் வந்தாலும் கட்சி ரீதியாக நடவடிக்கை எடுத்துக் கட்டுப்படுத்தும் விதத்தில் கட்சியின் அதிகார இலாகனை, கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இறுக்கமாகப் பிடித்து வைத்திருக்கின்றார் என்றே கூறவேண்டும். அமைச்சராக இருந்த விஜயதாஸ ராஜபக்ஷ மீது கட்சியின் ஒழுங்கு நடவடிக்கை பாய்ந்த முறைமை இதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

ஆனால், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைமை அப்படி இல்லை. ஏற்கனவே கட்சியின் கணிசமான உறுப்பினர்களைத் தனியே பிரித்து வைத்துக்கொண்டு, கூட்டு எதிரணி என்ற பெயரில் அரசியல் ரகளை பண்ணிக் கொண்டிருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

எங்கே அவர் மீண்டும் அரசியல் விஸ்வரூபம் எடுத்து விடுவாரோ என்று அஞ்சும் மைத்திரி பக்க சு.கவினர் கூட, அச்சத்தில், அவர் பக்கம் பாய்வதற்கும் ஒரு வழியைத் திறந்து வைத்துக்கொண்டுதான் பாதுகாப்பாக அரசியல் நடத்துகின்றார்கள்.

கட்சியின் ஒழுக்கக் கட்டுப்பாடு என்று நடவடிக்கை எடுத்துக் கடும்பிடி பிடிக்கப் புறப்பட்டால், தம்முடன் மிஞ்சி நிற்கும் சு.கவினரும் மஹிந்த ராஜபக்ஷ பக்கம் பாய்ந்து விடுவார்களோ என்ற பீதியில் கட்சித் தலைவரும், ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவும் அடக்கி வாசிக்கின்றார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியைக் கையில் வைத்திருந்தும் ஏதும் செய்ய இயலாத கையறு நிலையில் அவர். இதனால், தறிகெட்டுச் செயற்படுகின்றார்கள் சுதந்திரக் கட்சிப் பிரமுகர்கள். அதுவும் அக்கட்சியின் மூத்த அமைச்சர்கள் பலரும் கூட கட்டுக் கடங்காமல் செயற்படுகின்றமையால் குழப்ப நிலைமை.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனாவுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கும் அமைச்சரவை முடிவை, அமைச்சரவை கூட்டுப் பொறுப்பை மீறி இரண்டு அமைச்சர்கள் வெளிப்படையாக - மோசமாக - விமர்சித்தனர். ஒருவர் - ஐ.தே. கட்சியின் விஜயதாஸ ராஜபக்ஷ. மற்றையவர் - சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் சுசில் பிரேமஜயந்த.

விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக ஐ.தே. கட்சியின் ஒழுங்கு நடவடிக்கை பாய்ந்தது. அவர் அமைச்சுப் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். ஆனால், சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சரான சுசில் பிரேமஜயந்தவிடம் குறைந்தபட்சம் விளக்கம் கூடக் கோரப்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் சில உறுப்பினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேரில் சந்தித்து ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தனர். சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்கள் சிலர் - சுசில் பிரேம ஜயந்த உட்பட - வெளிப்படையாக அரசையும், அதன் பங்காளிக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியையும் விமர்சித்து வருகின்றார்கள். இது கூட்டு அரசுக்குப் பொருத்தமல்ல என்பதே அக்குற்றச்சாட்டு.

இந்த விடயம் குறித்துத் தாம் கவனிப்பார் என்றும், உரிய நடவடிக்கை எடுத்து, சம்பந்தப்பட்டோரைக் கட்டுப்படுத்துவார் என்றும் ஜனாதிபதி தரப்பில் உறுதி அளிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

ஆனால், அத்தகைய உறுதிமொழி பயன்தருமா என்பது தெரியவில்லை.

ஏற்கனவே, சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் சுசில் பிரேமஜயந்த, அனுர பிரியதர்ஷன யாப்பா, டபிள்யூ.டி.ஜே. செனிவிரத்ன, பிரதி அமைச்சர்களான இந்திகா பஸநாயக்கா, நிமல் லன்ஸா, டியூலிப் விஜேசேகரா, தரநாத் பஸநாயக்கா உட்பட 13 எம்.பிக்கள் தனியாக ஒரு வீட்டில் கூடி இனிமேல், சுதந்திரக் கட்சி தரப்பிலும் அல்லாமல், கூட்டு எதிரணித் தரப்பிலும் அல்லாமல் தனித்து ஒரு சுயாதீனக் குழுவாகப் இயங்குவது குறித்துத் தீவிரமாகப் பரிசீலித்து முடிவு எடுத்திருக்கின்றார்கள் என்ற தகவல் கசிந்திருக்கின்றது.

இந்த நிலைமையில், நல்லாட்சி அரசின் போக்குத் தொடருமானால், மிக விரைவில் வரக்கூடிய உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்பதாகவே இந்த அரசை கூட்டு எதிரணி கவிழ்த்தாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

அந்த ஆபத்தைச் சமாளிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் என்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப் போகிறார்களோ?

# சுவிற்சர்லாந்தின் தலைநகர் பேர்னிலில் அலையெனத் திரண்டனர் தமிழர்கள்!

சுவிற்சர்லாந்தின் பேர்னில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவிலின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் வெகுவிமரிசையாக



நடந்தது.

தெய்வத் தமிழில் வண்டமிழ்ச் சடங்குகள் ஆற்றி எம்பெருமான் இன்பத் திருச்செவிகள் குளிர தேர்த்திருவிழா பல்லாயிரக்கணக்கான மக்கள் புடைசூழ கோலாகலமாக நடந்தது.

விழாவின் நிறைவில் முத்தமிழ் நிகழ்வுகள் ஐரோப்பியத் திடலில் நடைபெற்றன.

பேர்ன்நகரேமெய்சிலிர்க்கும் வண்ணம் பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டு வந்து எம்பெருமானின் அருளைப் பெற்றனர்.

சுவிற்சர்லாந்தின் பேர்ன் பெருநகரில் சைவமும் தமிழும் சிறந்து விளங்க ஞானலிங்கேச்சுரர் பெருங்கருணை புரிந்து ஐரோப்பாத் திடலில் நாளும் தமிழ் ஒலிக்க அருள்செய்துள்ளான்.

பேர்ன் நகரில் அமைந்துள்ள பல்சமய இல்லத்தின் (Hausder Religionen) பிரதிநிதிகள், பல்சமயத் தலைவர்கள் ஒன்று கூடி வருகை அளித்து, ஞானலிங்கேச்சுரர் தேர்த் திருவிழாசிறக்கதம் வாழ்த்துக்களை



நவின்று சென்றனர். றெகுலா அவர்கள் தனது உரையில்– ''இக்கோவில் அடிக்கல் நட்டது முதல் இன்று விழாக்காணும் காலம்வரைநான்தமிழ்மக்களையும் அவர்களது பக்தியையும் அறிவேன். நேரில் கண்டு வியந்திருக்கிறேன். நீங்கள் சைவநெறிக் கூடத்தின் திருக்கோவில் ஊடாக பல்சமயத்தில் உறுப்பினாராக விளங்குவதும் எமக்கு மகிழ்ச்சி அளிக்கிறது'' என வாழ்த்தினார்.

பேர்ன் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தில் இருந்து. அன்ரன் மற்றும் வின்சன் வருகையளித்து நிகழ்வைச் சிறப்பித்தனர்.

சைவநெறிக் கூடத்தின் கொள்கை சமயம் தாண்டி தமிழர்கள் நாம் ஒரு வலிமையான இனமாக விளங்க வேண்டும் என்பதாகும்.

வருகை அளித்த விருந்தினர்கள் யாவருக்கும் சிறப்பு மதிப்பளிப்பு நடைபெற்றது.

புதிதாக பொறுப்பேற்றிருக்கும் திருமதி. றெகுலா மேடர் மற்றும் பழைய தலைவி கலாநிதி. திருமதி கேர்டா கவுக் ஆகியோர் வருகையளித்திருந்தனர்.

சுவிற்சர்லாந்தின் பேர்ன் மாநிலத்தின் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரி பெல்லெர் அவர்களும் வருகை அளித்து விழாவைச்



சிறப்பித்துப் பேசினார். தமிழர்கள் தமது பாரம்பரியத்தைப் பேணுவதற்கு தனக்கு வாய்ப்புக்கிடைப்பது மகிழ்ச்சி எனத் தன் உரையில் தெரிவித்தார்.

பலபத்து அடியார்கள்கூடி வேல் குத்திக் காவடி எடுத்தனர். சிறுவர்கள், பாலர்கள், இளவயதினர் காவடி எடுத்து ஆடிவந்த காட்சி இது சுவிஸா? ஈழமா? என வியக்க வைத்தது.

பல பெண் அடியார்கள் தீச்சட்டிகளைச் சுமந்து வந்து தம் வேண்டுதலை நிறைவு செய்தனர்.

இந்த ஆண்டும் மூன்று தேர்கள் திருவலம் வந்தன. முதற்தேரில் கரி முகக்கடவுள் பிள்ளையாரும், முருக்கப்பெருமானும், திருமால் எழுந்திருக்க, ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் நடுநாயகமாக எழுந்தகாட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

### சிறப்புத் தேரில் திருவள்ளுவரும்

உலகப்பொது மறையளித்த திருவள்ளுவர் பெருமானுக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. இளம் சிறார்கள் திருக்குறள் ஓதி சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து திருவள்ளுவரும் சிறப்புத் தேரில் எழுந்து உலா வந்தார். சைவமும் தமிழும் இரண்டல்ல ஒன்றென விளக்கியதாக இது அமைந்தது.

தமிழ் உலகின் முதன்மைத் தமிழ் ஊடகங்கள் செய்தியை நேரடி அஞ்சலும் பதிவும் செய்தன. சைவநெறிக் கூடத்தின் சார்ப்பில் யாவருக்கும் நன்றி நவிலப்பட்டது.

ஐரோப்பாத்திடல் முழுவதும் தமிழ் மணம் நிறைந்தது, பல தமிழ் அங்காடிகள் திருவிழாச் சூழலை மனதில் பதிய வைத்தன.

கோவில்கள் வெறும் சடங்குகளுடன் நின்றுவிடாமல் தம் பணியை இனம், மொழி, சமயம், பண்பாடு, வரலாறு காக்கும் கருவிகளாக விளங்க வேண்டும் எனும் சைவநெறிக் கூடத்தின் நோக்கம் ஒழுகுவதாக நிகழ்வுகள் அமைந்தன.

தேர் முன்றிலில் முத்தமிழ் நிகழ்வுகள் நடைபெற்றன. தமிழர்களாகிய நாம் ஒன்றுபட்டால் மட்டுமே வாழ்வு உண்டெனத் தேர்த்திருவிழா அடையாளமாக விளக்குவதாக ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில் அருட்சுனையர். சிவருசி. தர்மலிங்கம் சசிக்குமார் ஐயா விளக்கினார்.

ஊர்கூடி இழுத்தால் வாசல் வந்து தேர் சேரும், இன்று நாம் திருவாசல் வந்து அடைந்துள்ளோம், ஆனால், இன்னும் வாசல் வந்து சேரவேண்டிய தேர்கள் பல உண்டு, நாம் தமிழர்கள் ஒன்றாக இத்தேரை இழுத்து திருவாசல் சேர்க்க வேண்டும் என விளக்கினார்.

ஒருநாள் தமிழர்கள் தேர் திருவாசல் வரும் எனும் நம்பிக்கையுடன் ஞானலிங்கேச்சுரர் திருத்தேர் விழா நிறைவுற்றது. (இ)

## நாளை

29.08.2017
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம் : அனுசம் பி.இ. 12.56 வரை
திதி : அட்டமி பி.இ. 4.00 வரை
சுபநேரம் : 10.35 – 12.05 வரை
இராகுகாலம் : 3.05 – 4.35 வரை

# நல்லாட்சி அரசில் சு.க. நீடிப்பதா, இல்லையா?

## டிசெம்பரில்தான் முடிவு என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஓக.28

சிறிலங்கா சுதந்திரக் கட்சி இந்த அரசாங்கத்தின் பங்காளியாகத் தொடர்ந்தும் செயற்படுவதா? இல்லையா? - இது குறித்து இரு பெரும் கட்சிகளும் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை காலம் முடிந்த பிறகு, கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றாக இணைந்து செயற்படுவதற்குக் கடந்த 2015 ஒகஸ்ட் மாதம் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த காலம் எதிர்வரும் டிசெம்பருடன் முடிவடைகின்றது. இதன் பின்னர் கட்சியின் மத்திய செயற்குழு கூடி இந்த விடயம் தொடர்பில் தீர்மானிக்கும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.



சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் தற்போதைய அரசாங்கத்துடன் முறுகல் நிலையில் காணப்படுகின்றனர். கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் பொதுக் கூட்டமொன்றிலேயே பிரதி அமைச்சர் சுஜீவ சேமசிங்கவும், அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தும் கருத்து மோதலில் ஈடுபட்டனர்.

அதேபோன்று, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் டபிள்யு. டி.ஜே. செனவிரத்ன கடந்த நாடாளுமன்றக் கூட்டத்தில் கூட்டு எதிர்க் கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன கொண்டுவந்த பிரேரணைக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்திருந்தார். பல்வேறு பொதுக் கூட்டங்களிலும் அரசாங்கத்துக்கு எதிராக பேசி வருகின்றார்.

தேர்தல் ஒன்று வரும் போது, இனி இரு கட்சிகளும் கூட்டணி அமைத்துப் போட்டியிடுவதற்குச் சாத்தியமில்லை என்பதை உணர்ந்து அதற்கேற்ற சூழ்நிலையை இப்போதே காட்டுவது போல இவ்வாறு பிரிவது போன்றும், முறுகல் இருப்பது போன்றும் காட்டிக் கொள்கின்றார்களோ என்ற சந்தேகமும் பொது மக்கள் மத்தியில் இல்லாமல் இல்லை.

(உ)

## மகாசங்கத்தினரின் பேச்சைக் கூட நல்லாட்சி அரசு கேட்பதில்லையாம்

### கூட்டு எதிரணியின் பிரசன்ன ரணதுங்க விசனம்

கொழும்பு, ஓக.28

இந்த நல்லாட்சி அரசு மகா சங்கத்தினரின் பேச்சைக் கொஞ்சம் கூட செவிசாய்க்காது செயற்பட்டு வருவதாக முன்னாள் மேல் மாகாண முதலமைச்சரும் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.



தற்பொழுது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு மகா சங்கத்தினரின் ஆதரவு இல்லாமல் போயுள்ளது. சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களும் உள்ள இந்த அரசில் தேரர்களின் தலை வெடிக்க அடிக்கின்றனர். இந்த அரசில் 68 தேரர்கள் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாகச் சிறைப் படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தத் தேரர்கள் சொல்வதை இந்த அரசு கேட்கிறதா? அஸ்கிரிய மகா நாயக்க தேரர் அமைச்சர் பதவியிலிருந்து விஜேதாஸ ராஜபக்ஷவை நீக்க வேண்டாம் எனக் கூறினார்.

அவர் திருடர் அல்லர் எனவும், அவர் நாட்டுக்காகச் செயற்பட்ட ஒருவர் எனவும், பௌத்த மதத்துக்காக குரல் கொடுத்த ஒருவர் எனவும் அஸ்கிரிய மகா நாயக்க தேரர் கூறினார். ஆனால் நடந்தது என்ன?

இதுதான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கையா? -எனவும் பிரசன்ன ரணதுங்க கேள்வி எழுப்பினார்.

## சு.க.வின் 3 அமைச்சர்களுக்கு எதிராக ஜனாதிபதியிடம் புகார்!

கொழும்பு, ஓக.28

அரசில் அங்கம் வகிக்கின்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களான டிலான் பெரேரா, சுசில் பிரேம ஜயந்த மற்றும் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஆகிய மூவருக்கும் எதிராக ஐக்கிய தேசியக் கட்சியினர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த மூன்று அமைச்சர்களும் அரசில் இருந்து கொண்டே அரசின் மீதும் அரசில் அங்கம் வகிக்கின்ற அமைச்சர்கள் மீதும் பகிரங்கமாகக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றன எனவும் இதனால் அரசின் மீது மக்கள் அதிருப்தி கொள்கின்றனர் எனவும் அவர்கள் சுட் டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறு மூன்று அமைச்சர்களுக்கு எதிராக முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகளை அடுத்தே தாம் அடுத்த கட்ட நகர்வு களை எடுக்கவுள்ளனர் எனவும் ஐக்கிய தேசிய கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

அரசில் அங்கம் வகிக்கும் இந்த மூன்று அமைச்சர்களும் அரசையும் குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களையும் கடுமையாக விமர்சித்து வருகின்றனர் எனவும் தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்தன.

இந்நிலையிலேயே தற்போது அவர்களுக்கு எதிராக ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(உ)

## மைத்திரி தரப்புடன் பேச்சு இல்லை என்கிறார் மஹிந்தர்!

கொழும்பு,ஓக.28

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தரப்புடன் எவ்வித பேச்சுகளையும் நடத்தவில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பில் இரகசியமான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக வெளியான தகவல்கள் பற்றி கூட்டு எதிர்க் கட்சியினர் அண்மையில், மஹிந்த ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்பியிருந்தனர்.

மைத்திரி தரப்புடன் தேர்தலில் போட்டியிட்ட அனுபவம் உண்டு என்பதனால் மீளவும் அவர்களுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடும் உத்தேசம் கிடையாது எனவும், மைத்திரியின் பிரதி நிதிகளுடன் பேச்சு நடத்தும் திட்டமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(உ)



## ராஜிதவுக்கு எதிரான பிரேரணை அவருக்கு அரசியல் ஆசீர்வாதம்!

### இப்படி மகிழ்கிறார் எஸ்.பி.திஸாநாயக்க

கொழும்பு,ஓக28

அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராகக் கூட்டு எதிரணியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை அவரின் அரசியல் பயணத்துக்கான ஓர் ஆசீர் வாதம் என அமைச்சரும் முன்னாள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமான எஸ்.பி. திஸாநாயக்க மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டால், அதற்கு எதிராக சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடன் சேர்ந்து தாமும் செயற்படவுள்ளார் எனவும் அவர் கூறியுள்ளார்.



பேருவளைப் பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் ராஜித வுக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள இப்பிரேரணையில், மாலபே நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை மற்றும் சைட்டம் விடயங்கள் என்பனவும் உள்ளடங்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு பிரச்சினை களுக்கும் உரியவர்கள் - காரணமானவர்கள் - இப்போது முறைப்பாட்டை முன்வைக்கும் கூட்டு எதிர்க் கட்சியினரே எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(உ)

## 10 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட

# கரடியனாறு விவசாய பயிற்சி நிலையத்தை திறந்து வைக்க வருகின்றார் ஜனாதிபதி

### சம்பந்தன், துமிந்த உட்பட ஐரோப்பிய ஒன்றியத்தினரும் விஜயம் செய்வர்

மட்டக்களப்பு,ஓக.28

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 31ஆம் திகதி வியாழக்கிழமை மட்டக்களப்பு கரடியனாறு பிரதேசத்திற்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

கிழக்கு மாகாண விவசாய அமைச்சினால் கரடியனாறு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விவசாய சேவைக்காலப் பயிற்சி நிலையக் கட்டடத் தொகுதியைத் திறந்து வைப் பதற்காகவே இந்த விஜயத்தை அவர் மேற்கொள்ளவுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் மாவட்ட அபிவிருத்திகளுக்கான செயற்திட்டத்தின் மூலமான ஒன்பது கோடி 80 லட்சம் ரூபா நிதியில், உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் மூலம் இந்தப் பயிற்சி நிலையத்தின் நிர்மாணிப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சி நிலையம் இலங்கை சுதந்திரம் பெறுவ தற்கு முன்பிருந்தே கரடியனாறு பண்ணைப் பாடசாலை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

இது இலங்கை சுதந்திரம் அடைந்து அதற்குப் பிற்பட்ட காலப் பகுதிகளில் பல்வேறு வளர்ச்சி நிலைகளை அடைந்து பண்ணைப் பாடசாலை உட்பட மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், சேவைக் காலப் பயிற்சி நிலையம், விதை அத்தாட்சிப் படுத்தல் சேவை, விதை உற்பத்திப் பண்ணை, பிராந்திய







ஆராய்ச்சி நிலையம் போன்ற பல பிரிவுகளைக் கொண்டு இயங்கி வந்துள்ளது.

பின்னர் நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக இந்தப் பண்ணையின் செயற்பாடுகள் முற்றாக ஸதம்பிதம் அடைந்திருந்தன.

முன்பு மத்திய அரசிற்கு மாத்திரமே உரித்தாக இருந்த இப்பண்ணைப் பிரதேசம், மாகாண சபைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் ஒரு குறிப்பிட்ட அளவு பிரதேசம் மாகாண விவசாய அமைச்சின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

அதன் பிற்பாடு யுத்தம் முடிவுற்று 2010ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் கிழக்கு மாகா ணத்திற்கு என சேவைக்காலப் பயிற்சி நிலையம் ஒன்று அத்தியாவசியமானது எனக் கருதப் பட்டு மேற்படி பிரதேசத்தில் 20 ஏக்கர் மேட்டுக் காணியும் 5 ஏக்கர் வயல்காணியும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சிற்குவழங்கப்பட்டன.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட மாற்றத்தினூடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மாகாண ஆட்சியில் பங்காளிகளாக உள்ளீர்க்கப்பட்டு விவசாய அமைச்சுப் பொறுப்பையும் பெற்றது.

தற்போது இந்தச் சேவைக் காலப் பயிற்சி நிலையத்தில் நிர்வாகக் கட்டடம், விரிவுரை மண்டபம், சமையலறை உட்பட உணவு உட்கொள்ளும் மண்டபம், நூல் நிலையம், ஆண், பெண் இருபாலருமாக 40 பேர் தங்கிநிற்கக் கூடிய விதத்தில் அமைக்கப்பட்ட விடுதி வசதி, சுமார் 250 பேர் வரை உள்வாங்கக் கூடிய நவீன கேட்போர் கூடம் போன்றன அமைக்கப்பட்டுள்ளன.

இந்தக்கட்டடத்திறப்பு விழாவிற்கு கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் துரைராசசிங்கத்தின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் நிகழ்வுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, கிழக்க மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம, கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமட் ஆகியோரும் நிகழ்வுக்கு வருகை தரவுள்ளனர்.அத்தோடு, ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மாலை தீவிற்கான ஆலோசகர் விலம் வர்போஸ்ட், ஐரோப்பிய ஒன்றியத்தின் உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் இலங்கை மாலைதீவிற்கான பிரதிநிதி நினா பிரன்ஸ்ரப் ஆகியோரும்-

மேலும் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், திணைக்களப் பணிப் பாளர்கள், உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## பொலிஸ் அதிகாரியைத் தாக்கிய 5 இராணுவத்தினருக்குப் பிணை!

கொழும்பு, ஓக.28

அவிசாவளையில் பொலிஸ் அதிகாரி ஒருவர் மீது இராணுவ அதிகாரிகள் 5 பேர் கடுமையாகத் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர் என சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

தாக்குதலுக்குள்ளான பொலிஸ் அதிகாரி அவிசாவளை வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

தியத் தலாவை இராணுவ முகாமில் கடமையிலுள்ள கப்டன் மற்றும் 4 இராணுவ சிப்பாய்களே இவ்வாறு தாக்குதல் மேற்கொண் டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

கொழும்பில் இருந்து தியத்தலாவை வரை லொறி ஒன்றில் பயணித்த இராணுவத்தினர் நேற்று மாலை இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதலில் ஈடுபட்ட இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில், 5 லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## அமெ., இந்தியா, ஈரான் உட்பட 17 நாடுகள் பங்குபற்றும்

# இந்து சமுத்திர பாதுகாப்பு மாநாடு வியாழன், வெள்ளியில் கொழும்பில்!

### புதுடில்லியில் இருந்து பிரணாப், சுஷ்மா அடங்கிய மிக வலிமையான குழு வருகை

அமெரிக்கா, இந்தியா, ஈரான் உள்ளிட்ட 17 நாடுகள் பங்கு பற்றும் இந்து சமுத்திரப் பாதுகாப்பு மாநாடு எதிர்வரும் வியாழக்கிழமை கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த மாநாடு அலரி மாளிகையில் இரண்டு நாள்கள் நடைபெறவுள்ளது. இம் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ், மத்திய ரயில்வே அமைச்சர் ஸ்ரீ சுரேஷ் பிரபு மற்றும் வெளியுறவு செயலாளர் எஸ். ஜெயசங்கர் உள்ளிட்ட உயர் மட்ட குழுவினர் எதிர்வரும் புதன் கிழமை இலங்கை வரவுள்ளனர்.

சீனா தனது பட்டுப்பாதை திட்டத்தை கடல் மற்றும் நிலம் மார்க்கமாக நட்பு நாடுகளின் ஒத்துழைப்புடன் மிக வேகமாக விஸ்தரித்துத் தனது இலக்கை அடைந்து வருவதால் இந்தியாவின் ஆதிக்கத்திற்கு அது சவாலாகவுள்ளது.

இதனால் இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு விடயத்தில் இந்தியா முன்பை விட தற்போது கூடிய அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது.

சீனாவின் பட்டுப்பாதை திட்டத்தில் ஒன்றே அம்பாந் தோட்டைத் துறைமுக ஒப்பந்தம் என நன்கு அறிந்த இந்தியா இங்குள்ள நிலைமைகளைச் சரி செய்வதற்கும் இந்து சமுத்திரத்தில் தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வதற்குமான நகர்வுகளை மேற்கொண்டு வருகிறது.

இச் சூழ்நிலையில் இலங்கையில் இடம்பெறவுள்ள இந்து சமுத்திர பாதுகாப்பு மாநாட்டை தனக்கு சார்பாக்கி கொள்ளும் முழு மூச்சுடனே இரண்டு மத்திய அமைச்சர்கள் உட்பட உயர் மட்ட குழுவை டில்லி இலங்கைக்கு அனுப்பிவைக்கவுள்ளது.

பல முக்கிய நாடுகளின் பிரமுகர்களின் பங்களிப்புடன் கொழும்பில் இடம்பெறவுள்ள மாநாட்டில் கடல் பாதுகாப்பு சார்ந்த பல விடயங்கள் குறித்துப் பொது இணக்கப் பாடுகள் எடுக்கப்படவுள்ளன எனக் கூறப்பட்டது. (உ)

## அமெரிக்க உயரதிகாரி இலங்கை வருகிறார்



அமெரிக்க உயர் அதிகாரியொருவர் இலங்கைக்கு வரவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க பதில் இராஜாங்கச் செயலாளர் அலிஸ் வேல்ஸ் அம்மையார் என்பவரே இலங்கைக்கு வர உள்ளார்.

பல நாடுகளுக்கு வேல்ஸ் பயணம் செய்து வருகிறார் எனவும் இதன் அடிப்படையில் இலங்கைக்கும் பயணம் செய்ய உள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 31 ஆம் திகதி இந்து சமுத்திர மாநாடு கொழும் பில் நடைபெறவுள்ள நிலையில் இந்த மாநாட்டில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி அலிஸ் வேல்ஸ் உரையாற்ற உள்ளார்.

இலங்கையில் தங்கியிருக்கும் காலப் பகுதியில் அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் முக்கிய பிரமுகர்களை அவர் சந்தித்து பேச்சு நடத்துவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## கொழும்புப் பாதுகாப்புக் கருத்தரங்கு இன்று ஆரம்பம்; நாளையும் நடக்கும்

### 200 வெளிநாட்டுப் பிரதிநிதிகள் உட்பட 800 பேர் பங்கேற்பு

இலங்கை இராணுவம் ஆண்டு தோறும் நடத்தும் வரிசையில் இவ்வாண்டுக்கான 'கொழும்பு பாதுகாப்புக் கருத்தரங்கு - 2017' இன்று ஆரம்பமாகவுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தொடங்கவுள்ள இந்தக் கருத்த ரங்கு இரண்டு நாள்கள் நடைபெறும்.

'வன்முறை தீவிரவாதத்தை எதிர்கொள்ளல் - உலகளாவிய போக்குகள்' என்ற தொனிப் பொருளில் இந்த ஆண்டுக்கான கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இதில் வெளிநாட்டைச் சேர்ந்த 12 மற்றும் உள்நாட்டைச் சேர்ந்த 15 புலமையாளர்கள் உரையாற்றவுள்ளனர் என்பதுடன், 200 வெளிநாட்டுப் பிரதிநிதிகள் உள்ளிட்ட 800 பேர் பங்கேற்கவுள்ளனர்.

இலங்கையில் உள்ள 10 நாடுகளின் வெளிநாட்டு ஆலோசகர்களும், இந்தியாவில் இருந்து வரும் 22 நாடுகளின் பாதுகாப்பு ஆலோசகர்களும், 42 வெளிநாட்டு இராணுவ பிரதிநிதிகள் குழுக்களைச் சேர்ந்தோரும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

சார்க் நாடுகளின் அனைத்து இராணுவத் தலைமை அதிகாரிகளும் இந்தப் பாதுகாப்புக் கருத்தரங்கில் பங்கேற்கவுள்ளனர்.

சிறிலங்காவில் இந்திய அமைதிப்படையில் பணியாற்றிய, இந்திய இராணுவத்தின் ஓய்வு பெற்றமூத்த அதிகாரியான மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா முக்கிய உரை ஆற்றவுள்ளார். (உ)

## இலங்கை உட்பட அயலகத்தில் சீனத் தலையீடு மிகத் தீவிரம்!

### இந்தியத் தளபதி ஜெனரல் ராவத் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஓக.28

பிராந்திய பாதுகாப்புச் சூழலில் சீனா தனது தலையீட்டை தொடர்ந்தும் வலுப்படுத்தி வருவதாக இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிபின் ராவத் குற்றம் சாட்டியுள்ளார்.

குறிப்பாக, இந்தியாவின் அயல் நாடுகளான இலங்கை, பாகிஸ்தான், மாலைதீவு, மியன்மார் போன்றவற்றுடனான பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை சீனா அதிகரித்து வருகிறது.



பாகிஸ்தானின்கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் வழியாக, சீன-பாகிஸ்தான் பொருளாதாரப் பாதை அமைக்கப்படுவது, இந்தியாவின் இறைமைக்கு சவாலாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். (உ)

## நாரம்மல பள்ளிவாசல் மீது நள்ளிரவில் திடீர் கல்வீச்சு!

குருநாகல், ஓக.28

குருநாகல் மாவட்டம் நாரம்மல, பொல்கஹயாய பிரதேத்தில் அமைந்துள்ள மஸ்ஜித் அன்னூர் ஜூம்மா பள்ளிவாசல் மீது நேற்றுமுன்தினம் நள்ளிரவு கல்வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ள நிலையில் அந்தச் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் ஐந்து பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நள்ளிரவு இரண்டு மணி அளவில் மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் பள்ளிவாசல் மீது கல்வீசி தாக்கியபோது அங்கு தஹ்வா பணியில் இருந்த தப்லீக் சகோதரர்கள் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் விடுத்தமையை தொடர்ந்து ஊர் மக்கள் அங்கு பள்ளி வாசலில் குழுமியுள்ளனர்.

பள்ளிவாசல் மீது கல்வீசி தாக்குதல் நடத்தியவர்கள் தாக்குதல் நடத்த முன்னர் சந்தேகத்திற்கிடமான முறையில் உலவியமை நாரம்மல பகுதி ஹோட்டல் ஒன்றின் கண்காணிப்புக் கமராவில் பதிவாகியிருந்த நிலையில் அதனை ஆதாரமாகக் கொண்டு இந்த நபர்கள் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர். (உ)



சந்தேகத்தில் ஐவர் உடனடியாகக் கைது

## கிளிநொச்சியில் வெற்றிகரமாக இம்முறை சிறுபோக செய்கை

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த சிறுபோக நெற் செய்கை வெற்றிகரமாக நிறைவு பெற்று அறுவடைகள் இடம் பெற்று வருகின்றன என இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளனச் செயலாளர் எஸ்.சிவமோகன் தெரிவித்தார்.

இவ்வாண்டு காலபோகத்தின் விதை நெல்லிற்காக 900 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு இருந்தது. இரணைமடுக்குளம் முழுமையாக வற்றி நீர்ப்பாசன நெருக்கடி ஏற்பட்டபோது பயிர்ச்செய்கை பாதிப்புக்குள்ளாகலாம் என்ற நிலையில் நீர்ப்பாசனத் திணைக்களமும் விவசாயிகளும் இணைந்து இரணை மடுக் குளத்தின் வாய்க்கால்களை



ஆழப்படுத்தி இறுதிக்கட்ட நீர்ப்பாசன முயற்சிகளை மேற்கொண்டமை மற்றும் மழை வீழ்ச்சி இடம் பெற்றமை போன்றன சிறுபோக நெற் செய்கையை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு காரணமாக அமைந்து விட்டன என அவர் மேலும் தெரிவித்தார்.

நான்கைந்து நாள்களில் அறுவடை நடைபெற்று முடிந்து விடும் எனவும் அவர் தெரிவித்தார்.

# பிரதிபலிப்பு சிகிச்சையை பெற விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளலாம்

பிரதிபலிப்புச் சிகிச்சை நிபுணர் திருமதி இராஜேஸ்வரி எதிர்வரும் 6 ஆம் திகதி இலங்கைக்கு மீண்டும் வரவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது இலவச வைத்தியமும் இலவச பயிற்றுவிப்பும் இடம்பெறும்.

கொழும்பு, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி, திருகோணமலை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய இடங்களில் ஏற்கனவே வைத்தியமும் பயிற்றுவிப்பும் இடம் பெற்றமையால் இந்தமுறை இவை தவிர்ந்த ஏனைய இடங்களில் வைத்தியமும் இலவச பயிற்றுவிப்பும் இடம்பெறவுள்ளது.

ஆகவே, அவருடைய இந்த சேவை தேவைப்படுபவர்கள் உடனடியாகக் கீழ்வரும் ஸ்தாபனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. செயலாளர், ஸ்ரீராம் சுந்தரமிஷன், 33ஏ, மல்லிகா லேன், வெள்ளவத்தை, கொழும்பு 6. தொலைபேசி இலக்கம் 0718361706.

பாரிவாதம், கைநடுக்கம் (Parkinson/s disease) போன்ற நோய்களுக்குக் கடந்த முறை சிகிச்சை தொடங்கியவர்கள் திருமதி இராஜேஸ்வரி கொழும்பில் தங்கியிருக்கும் சமயத்தில் அவருடன் தொடர்புகொள்ள வேண்டுமாயின், அவர்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## தினசரி ராசி பலன் 28.08.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித்திங்கள் 12 ஆம் நாள் ஸப்தமித்திதி இரவு 12.36 மணி வரை. பின்னர் அஷ்டமி. நட்சத்திரம். விசாகம் இரவு 8.09 மணி வரை. பின்னர் அனுஷம். மரணயோகம் முழுவதும். ராகுகாலம்: காலை 7.35 மணி முதல் 9.07 மணி வரை. சுபநேரம்: பகல் 12.04 மணி முதல் 1.34 மணி வரை. திவசம் செய்யவேண்டிய திதி: ஆவணி மாத வளர் பிறை ஸப்தமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: விசாகம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** விருத்தியான நாள். சிலருக்குப் புதிய வேலை அதிக சம்பளத்துடன் கிடைக்கும். அலுவலகம் மூலம் பதவி உயர்வுகளும், நன்மைகளும் ஏற்படும். முயற்சி வெற்றியளிக்கும்.

**ரிஷபம் :** அனுகூலமான நாள். வெளியூர்ப் பயணங்களால் நன்மைகள் உண்டாகும். தாய்வழி உறவுகள் மூலம் வீடு, காணி போன்றவை கிடைக்கும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும்.

**மிதுனம் :** யோகமான நாள். சிலருக்குச் சொந்த வீடு புகும் நிலை உண்டாகும். பழைய வேலையிலிருந்து அதிக வருமானமுள்ள புதிய வேலைக்குச் சிலர் செல்வார்கள். பணபலம் அதிகரிக்கும்.

**கடகம் :** சமபலன்கள் காணப்படுகின்றன. ஆரோக்கியம் குறைவடையும். தொழில் பிரயாசையும் வெறுப்பும் உண்டாகும். பயணங்களைத் தவிர்க்கவும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

**சிம்மம் :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. உடல் நலம் பாதிப்புறும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். வருமானம் சுமாராக இருக்கும். செலவுகள் அதிகமாகும்.

**கன்னி :** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. சிலருக்குப் பதவி உயர்வு, ஊதிய உயர்வு என்பன கிடைக்கும். சகோதர உறவு வலுவடையும். நீண்டகாலக் கடன் அடைபடும்.

**துலாம் :** நன்மையான நாள். வியாபாரத்தில் அதிக முதலீடுகளைப் போடுவதும் வியாபாரத் தலங்களை விரிவாக்கம்செய்வதும் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தைத் தரும்.

**விருச்சிகம் :** தீமையான நாள். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் உண்டாகும். உடலில் ரோகங்கள் உண்டாகும். வியாபாரப் போட்டிகளைச் சமாளிப்பது கடினம்.

**தனுசு :** கீர்த்தியான நாள். வியாபாரத்தில் புதிய நுணுக்கமுறைகளைக் கையாண்டு முன்னேற்றமடைவார்கள். மாணவர்கள் கல்வித்திறமையால் ஆசிரியர்களின் பாராட்டையும் பரிசிலையும் பெறுவார்கள்.

**மகரம் :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. ஆரோக்கியக் குறைவால் மருத்துவச் செலவுகள் ஏற்படும். வேலைக்குப் போகும் பெண்கள் பாதுகாப்பாக இல்லாவிடின் பயணத்தில் பொருள்கள் திருட்டுப்போகும்.

**கும்பம் :** நன்மையான நாள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சிலருக்குப் பதவி உயர்வு, சம்பள உயர்வு ஏற்படும். வியாபாரம் செழிப்படையும்.

**மீனம் :** யோசனையான நாள். பணத்தட்டுப்பாடு உண்டாகும். வெளிநாட்டுப் பயணம் செல்ல முயன்றவர்கள் முகவர்களால் ஏமாற்றமடைவார்கள்.

சந்திராட்டமநாள்: பூரட்டாதி 4 ஆம் கால், உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் உதயமானோர் சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

### அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் பற்றி விமர்சனம்:

# விஜயதாஸ மட்டும் விரட்டியடிப்பு! சுசில் விடயத்திலோ மௌனம்!!

அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சீன நிறுவனத்துக்குக் குத்தகைக்குக் கொடுத்தமை தொடர்பாகக் கடும் விமர்சனங்களை முன்வைத்த விஜயதாஸ ராஜபக்ஷ, அதற்காக அவரது ஐக்கிய தேசியக்கட்சியின் ஏற்பாட்டில் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

ஆனால், அதேபோன்று கடும் விமர்சனங்களை முன்வைத்த அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சம்பந்தமாக அவரது சிறிலங்கா சுதந்திரக் கட்சி இதுவரை எந்த முடிவையும் எடுக்கவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

சு.க. இது சம்பந்தமாக தீர்மானம் எதையும் எடுக்கவில்லை என அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவும் அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான உடன்படிக்கை சம்பந்தமாக கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகின்றமையால், அவருக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக செய்திகள் வெளியாகி இருந்தன.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் சந்திம வீரக்கொடி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருப்பவர்கள் கட்சியின் ஒழுக்கக்கட்டுப்பாட்டை கொண்ட உறுப்பினர்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளையும் சுதந்திரக்கட்சி மேற்கொள்ளத் தயாரில்லை எனவும் கூறியுள்ளார்.

அதேவேளை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சம்பந்தமாக ஜனாதிபதி பொருத்தமான நடவடிக்கையை எடுப்பார் எனத் தாம் நம்புகின்றார் எனப் பிரதியமைச்சர் அஜித் பீ.பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

## இலவச யோகா, தியான கற்கைநெறிகள் சனி ஆரம்பம்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இலவசமாக நடத்தப்படும் யோகா - தியான கற்கைநெறியின் புதிய பிரிவு எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்த வகுப்புக்கள் நல்லூர் ஆலய முன்றிலில் அமைந்துள்ள ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் வார இறுதி நாள்களில் நடைபெறும்.

அத்துடன், ஆண்கள், பெண்களுக்கு தனித்தனிப் பிரிவுகளாக நடத்தப்பட இருக்கின்றன. ஆண்களுக்கான பிரிவு சனி, ஞாயிறு தினங்களில் காலை 6.30 மணிமுதல் 7.30 மணி வரையிலும் பெண்களுக்கான பிரிவு அதேநாள்களில் காலை 7.30 மணிமுதல் 8.30 மணி வரையிலும் நடைபெறவுள்ளன. நோயாளர்களுக்கும் விசேட கவனமெடுத்துக் கற்பிக்கப்படும்.

அத்துடன், சுமார் 3 மாத காலங்களை உள்ளடக்கிய இந்தக் கற்கைநெறியை பூரணமாகப் பூர்த்தி செய்பவர்களுக்குத் திணைக்களத்தால் சான்றிதழ்கள் வழங்கப்படும். எனவே, முற்றிலும் இலவசமாக நடைபெறும் யோகா - தியான வகுப்புகளில் இணைந்து பயன்பெற விரும்பும் இருபாலாரும் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் தமது பதிவுகளை, கற்கைநெறி ஆரம்பமாகும் தினத்தன்றோ அல்லது அதற்கு முன்போ மேற்கொண்டு இணைந்து கொள்ளமுடியும். மேலதிக தகவல்களை அலுவலக நேரத்தில் மேற்படி மண்டபத்தில் பெற்றுக் கொள்ள முடியும். சுமார் 15 வருட காலங்களாக தொடர்ச்சியாக இந்த வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருவதுடன் பெருமெண்ணிக்கையானோர் பயிற்சியைப் பூரணமாக முடித்து வெளியேறியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

## வரணி வடக்கில் நாய்த் தொல்லை; வீதியில் செல்வோர் பெரும் சிரமம்

### கவனம் செலுத்துமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை

வரணி, ஓக. 28

வரணி வடக்குப் பகுதியில் நாய்க்கடிக்கு உள்ளாவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கடந்தவாரம் இரு யுவதிகள் தெருநாய்களின் கடிக்கு உட்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

கடந்த புதன்கிழமை தனியார் கல்வி நிறுவனத்துக்குச் சென்ற மாணவர் ஒருவரைக் கொடிகாமம் பருத்தித்துறை வீதியான (ஏற்றம்) பகுதியில் வீட்டு நாய் துரத்தியதால் பதற்றமடைந்த மாணவன் வாகன விபத்தில் இருந்து தெய்வாதீனமாகத் தப்பி உள்ளார்.

நாய்களின் தொல்லையால் அந்தப் பகுதி மக்கள் பெரும் துன்பங்களை எதிர்கொள்கின்றனர். உரிய அதிகாரிகள் கட்டாக்காலி நாய்களின் தொல்லையைக் கட்டுப்படுத்த முன்வர வேண்டும் எனப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-25)

## கதிர்காமம் ஆலய நிர்வாகத்தினரை அமைச்சுக்கு அழைப்பு

கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமே மற்றும் பூசகர்கள் இன்று திங்கட்கிழமை புத்தசாசன அமைச்சுக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் திறப்பைக் கையளிப்பதில் ஏற்பட்ட முறுகல்நிலை காரணமாக கடந்த 22 ஆம் திகதி ஆலயத்தில் அதிகாலை பூசை வழிபாடுகள் இடம்பெறவில்லை.

பின்னர் பக்தர்களும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட முயற்சியின் அடிப்படையில் திறப்பு பூசகர்களிடம் கையளிக்கப்பட்டது. அதன்பின்னர் காலை 8 மணியளவிலேயே முதற்பூசை இடம்பெற்றது.

இது தொடர்பாகப் பலரும் தமது கண்டனங்களை வெளிப்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆலய உற்சவங்கள்

வடமராட்சி, வியாபாரிமூலை, இன்பர்சிட்டி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று திங்கள் காலை 9.10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை காலை வேட்டைத்திருவிழாவும் மாலை சப்பறமும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

★★★

சுன்னாகம் கிழக்கு (ஊரிசாட்டி) திருப்பதியுறை சிவபூத வராஜர் ஆலய மகோற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி பகல் வேட்டைத்திருவிழாவும் மாலை சப்பறத்திருவிழாவும் 5ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் அன்று மாலை 6 மணிக்கு ஊஞ்சல், கொடியிறக்கம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

★★★

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவ பெருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

பத்துத் தினங்கள் நடைபெறவுள்ள இந்த மகோற்சவத்தில் எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 8 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (இ)

## அல்லைப்பிட்டி யுவானியார் திருவிழா

மண்டைதீவு, ஓக. 28

அல்லைப்பிட்டி புனித யுவானியார் ஆலய நவநாள் வழிபாடு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறுவதுடன் நாளை செவ்வாய்க்கிழமை யாழ். மறைமாவட்ட ஆயர் வண. பிதா யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் திருவிழாத் திருப்பணிப் பூசை நடைபெறவுள்ளது. (இ)

வழிமூலம் - ECONOMIC TIMES
மொழியாக்கம் - நித்தியபாரதி




# சீனாவின் கடன் அழுத்தத்தைக் குறைக்கவே இந்தியாவுக்கு

# மத்தள!

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், கொழும்பிலிருந்து தெற்காக 250 கிலோமீற்றருக்கு அப்பால் அமைந்துள்ள அம்பாந்தோட்டையில் சீனாவின் 19 கோடி டொலர் நிதியுதவியுடன் மத்தள ராஜபக்ஷ அனைத்துலக விமான நிலையம் அமைக்கப்பட்டது. இந்த விமான நிலையத்தை அமைப்பதற்குத் தேவையான மொத் தச் செலவீனத்தின் 90 சதவீதக் கடனை சீனா வழங்கியது.

தற்போது மத்தள ராஜபக்ஷ அனைத்துலக விமான நிலையம் நட்டத்தில் இயங்குகிறது. இதனால் சீனாவின் எக்சிம் வங்கியிடமிருந்து பெற்ற கடனை சிறிலங்காவால் திருப்பிச் செலுத்த முடியாதுள்ளது. இந்நிலையில் மத்தள ராஜபக்ஷ அனைத்துலக விமானநிலையத்தை இந்தியாவிடம் கையளிப்பதெனவும் இதன்மூலம் சீனாவின் கடனை மீளச் செலுத்த முடியும் எனவும் சிறிலங்கா தற்போது தீர்மானித்துள்ளது.

சீனா தனது இலக்கான ஒரு பாதை ஒரு அணைத் திட்டத்தை மேற்கொள்வதற்கு ஆசியாவின் சிறிய நாடுகளில் இவ்வாறான சில கட்டுமானத் திட்டங்களை மேற்கொண்டுள்ள நிலையில் சிறிலங்கா தற்போது எதிர்நோக்கும் கடன் பிரச்சினைகளை இச்சிறிய நாடுகளும் எதிர்நோக்கும் என எதிர்பார்க்க முடியும்.

சீனா தன்னை ஒரு பூகோள பங்காளியாகக் காண்பிப்பதன் மூலம் தனது ஒரு அணை ஒரு பாதைத் திட்டத்தை அமுல்படுத்துவதன் ஊடாக சிறிய நாடுகளில் உள்ள முக்கிய சொத்துக்களைத் தனது கொலனித்துவத்தின் கீழ் கொண்டு வருவதற்கான சுரண்டல்களில் ஈடுபட்டு வருகிறது.

சீனாவின் ஒரு பாதை ஒரு அணைத் திட்டம் பல நாடுகளின் ஊடாக கடல் மற்றும் தரைவழிப் பாதைகளை ஒன்றிணைக்கும் பாரியதொரு வலைப்பின்னலாக உள்ளது. இந்தத் திட்டமானது 440 கோடி மக்களை இலக்காகக் கொண்டுள்ளது.

இதற்காக ஆயிரம் கோடி டொலர் செலவிடப்படவுள்ளதாக சீனா கூறுகிறது. இது தனியொரு திட்டமல்ல. சில தொடருந்துப் பாதைகள், வீதிகள், துறைமுகங்கள் மற்றும் ஏனைய கட்டுமானங்களை உள்ளடக்கிய ஆறு பெரும் பாதைத் திட்டம் சீனாவின் ஒரு அணை ஒரு பாதைத் திட்டத்தில் உள்ளடங்கியுள்ளது.

**சீனா தனது இலக்கான ஒரு பாதை ஒரு அணைத் திட்டத்தை மேற் கொள்வதற்கு ஆசியாவின் சிறிய நாடுகளில் இவ்வாறான சில கட்டுமானத் திட்டங்களை மேற்கொண்டுள்ள நிலையில் சிறிலங்கா தற்போது எதிர்நோக்கும் கடன் பிரச்சினைகளை இச்சிறிய நாடுகளும் எதிர்நோக்கும் என எதிர்பார்க்க முடியும்.**



இப்பொருளாதாரப் பாதைகள் நாடுகளில் கட்டுமானங்களை மட்டும் உருவாக்காது பூகோள வர்த்தகத்திற்கும் வழிசமைக்கின்றது. ஆசியாவிலுள்ள பெரும்பாலான நாடுகளும் பூட்டான் தவிர்ந்த இந்தியாவின் அயல்நாடுகளும் இத்திட்டத்தில் பங்கெடுக்க விரும்புகின்றன.

இத்திட்டத்தில் பங்கெடுக்கும் நாடுகள் அடிக்கட்டமைப்பு மற்றும் வர்த்தக சார் நலன்களைப் பெற்றுக் கொள்ளும். சிறிய நாடுகளால் மேற்கொள்ள முடியாத மிக முக்கிய கட்டுமானத் திட்டங்களைப் பெற்றுக் கொள்வதற்கான இலகுவான மற்றும் விரைவான வழியாக சீனாவின் ஒரு அணை மற்றும் ஒரு பாதைத் திட்டம் காணப்படுகிறது. ஆனால், இவையனைத்தும் பெரிய மறைமுகமான செலவை இச்சிறிய நாடுகள் மீது சுமத்துகின்றது.

சீனாவின் இத்திட்டத்தின் கீழ் சீனாவால் உயர் வட்டி வீதத்திலேயே கடன் வழங்கப்படுகிறது. இதனால் இக்கடனைத் திருப்பிச் செலுத்துவதில் சிறிய நாடுகள் இடர்களை எதிர்நோக்குகின்றன. இதன் மூலம் சீனா இத்திட்டங்களைதனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதுடன் அவற்றில் சமபங்கைப் பெறுவதற்கும் வழி வகுக்கின்றது.

இதன்மூலம் சீனா சில நாடுகளில் நிரந்தரமான பிரசன்னத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பையும் பெறுகின்றது. சிறிலங்காவில் தற்போதும் இடம்பெறும் நிகழ்வுகள் சீனாவிடமிருந்து கடனைப் பெறும் ஏனைய சிறிய நாடுகளுக்கு சிறந்ததொரு எச்சரிக்கையாகக் காணப்படுகிறது. சீனா தனது ஒரு அணை ஒரு பாதைத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு சிறிலங்காவின் அம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் விமானநிலையம் தேவைப்படுகின்றன.

சிறிலங்காவால் அம்பாந்தோட்டைத்திட்டத்தைஅமுல்படுத்துவதற்கு சீனாவிடமிருந்து பெறப்பட்ட கடனை மீளச் செலுத்த முடியாததால் தற்போது அம்பாந்தோட்டைத் துறைமுகம் 99 ஆண்டுகாலக் குத்தகைக்கு சீனாவிற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இத்துறைமுகம் எந்தவொரு இராணுவத் தேவைகளுக்காகவும் பயன்படுத்த முடியாது என சீனாவிடம் சிறிலங்கா தெளிவாகக் கூறியுள்ளது.

1971 தொடக்கம் 2012 இற்கு இடைப்பட்ட காலத்தில் சீனாவால் சிறிலங்காவிற்கு 500 கோடி டொலர் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் பெரும்பாலான நிதி கட்டுமான அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சிறிலங்காவின் தேசிய கடன்தொகை 6 ஆயிரத்து 490 கோடி டொலராகும். இதில் 800 கோடி டொலர்கள் சீனாவிற்குச் சொந்தமானதாகும். இது சீனாவின் கடன் வட்டியும் அதிகமாகும்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத் திட்டத்திற்காக சிறிலங்காவால் சீனாவிடமிருந்து 30 கோடி டொலர் 6.3 சதவீத வட்டியில் பெறப்பட்டது. இதேவேளையில் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் மென் கடன்களுக்கான வட்டி வீதமாக 0.25 தொடக்கம் 3 சதவீதம் அறவிடப்படுகிறது.

இந்தியாவால் தனது அயல் நாடுகளுக்கு வழங்கப்படும் கடனின் வட்டி வீதம் 1 சதவீதமாகும். சில நேரம் இந்த வீதம் குறைவாகவும் அறவிடப்படுகிறது. சிறிலங்கா தற்போது கடன் நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது. அதாவது சிறிலங்கா தற்போது 'கடன் பொறிக்குள்' சிக்கியுள்ளதாக கல்விமான்கள் சிலர் கூறுகின்றனர். சிறிலங்காவால் தற்போது சீனாவிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த முடியாதுள்ளது. பொருளாதார வளர்ச்சி மெதுவாக இடம்பெறுவதே இதற்கான காரணமாகும்.

சிறிலங்கா தன் மீதான கடன் நெருக்கடியைத் தீர்ப்பதற்காக தனது சொத்தை நீண்ட காலக் குத்தகைக்கு விடுவதற்குத் தீர்மானித்துள்ளது. சிறிலங்காவின் இத்தீர்மானம் சிறிலங்காவுக்குச் சொந்தமான சொத்தை சீனா தனது உடைமையாக்குவதற்கு வழிவகுக்கலாம்.


மத்தள விமான நிலையத்தை இந்தியாவிடம் கையளிப்பது தொடர்பான சிறிலங்காவின் தீர்மானம் தனக்கு எதிரான சீனாவின் கடன் அழுத்தத்தைக் குறைப்பதற்கான ஒரு நகர்வாகக் காணப்படுகிறது. ★




தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

## இந்தியா - சீனா நெருக்கடியும் புதுடில்லி உடனான மூலோபாய உறவுகளை அதிகரிக்கும் வொஷிங்டனும்

இந்தியாவுடனான வொஷிங்டனின் இராணுவ-மூலோபாய கூட்டணியை பலப்படுத்த சமீபத்திய நாள்களில் ட்ரம்ப் நிர்வாகமும் பென்கடனும் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளன.



வெளிப்படையாகவே இந்த நகர்வுகள் டோக்லம் பீடபூமி கட்டுப்பாடு மீது சீனாவுடனான தற்போதைய மோதலில் புதுடில்லி அதன் கடுமையான நிலைப்பாட்டை விடாப்பிடியாக வைத்திருக்க, இந்தியாவை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. டோக்லம் பீடபூமி என்பது, இமாலய மலைபகுதியில் புதுடில்லி ஒரு காபந்து அரசாகக் கையாளும் ஒரு சிறிய மன்னராட்சியான பூட்டானும் சீனாவும் தமது இறையாண்மை எல்லைப்பகுதியாக உரிமை கோருகின்றதும், இமாலய மலைத்தொடரில் அமைந்துள்ளதுமான ஒரு மலைஉச்சிப் பகுதியாகும்.

டோக்லம் பீடபூமியில் கடந்த இரண்டு மாதங்களாக இந்திய மற்றும் சீன துருப்புக்கள் ''நேருக்கு நேர்'' ஒன்றுக்கொன்று எதிரெதிராக அணிவகுத்து நிற்கின்ற அதேவேளையில், புதுடில்லியும் பெய்ஜிங்கும் ஒன்றின் மீது ஒன்று போர் நாடும் அச்சுறுத்தல்கள் மற்றும் குறைகூறல்களை விடுத்துள்ளதுடன் அவற்றின் இராணுவங்களைப் போருக்குத் தயாராக இருக்க உத்தரவிட்டுள்ளன.

### ''போர் இல்லையெனில், சமாதானம் இல்லை''

இந்தியா சீனாவை ஒட்டிய அதன் வடகிழக்கு எல்லையின் முன்னரங்கு நிலைகளுக்கு ஆயிரக்கணக்கான துருப்புகளை நகர்த்தி, அவற்றை ''போர் இல்லையெனில், சமாதானம் இல்லை'' என்ற உயர் எச்சரிக்கை நிலையில் நிலைநிறுத்தி உள்ளதுடன், வெடிகுண்டுகள், உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய போர் தளவாடங்களை அவசரகதியில் கொள்முதல் செய்யத் தொடங்கியுள்ளது.

சீனா, திபெத்திற்கு போர்விமானங்களை நகர்த்தியிருப்பதாகவும், இந்திய மாநிலம் அருணாச்சல பிரதேசத்தை ஒட்டிய அதன் எல்லைக்கு அருகே தரையிலிருந்து விண்ணில் சென்று தாக்கும் ஏவுகணைகளை நிலைநிறுத்தி இருப்பதாகவும் மற்றும் காயப்படுபவர்களைக் கருத்திக் கொண்டு திபெத்துக்கு கூடுதல் இரத்த கையிருப்புகளை அனுப்பி இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த மோதலில் வொஷிங்டனின் தலையீடு, இப்போதைக்கு அது மறைமுகமாக இருந்தாலும் கூட, அணுஆயுத சக்திகளான இந்திய மற்றும் சீனாவுக்கு இடையே ஓர் எல்லை மோதல் அபாயத்தை மிகப்பெரியளவில் அதிகரிக்கின்றது என்பதோடு, வேகமாக தீவிரமடைந்து, ஆசியா மற்றும் மொத்த மனித இனத்திற்குமே பேரழிவுகரமான விளைவுகளோடு அமெரிக்க மற்றும் ஏனைய பிராந்திய மற்றும் ஏகாதிபத்திய சக்திகளையும் உள்ளிழுக்கும்.

**முதல் படியாக, அவ்விரு நாடுகளும் அவற்றின் வெளியுறவு மற்றும் பாதுகாப்பு அமைச்சர்களை உள்ளடக்கிய ''மந்திரிகள் அளவிலான இருவருக்கு-இருவர் (2-by-2) பேச்சுவார்த்தையை'' தொடங்கி, ''அவற்றின் மூலோபாய ஆலோசனைகளை அதிகரிக்கும்.''**

இந்திய சுதந்திர தினத்தன்று ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் இந்திய பிரதமமந்திரி நரேந்திர மோடிக்கு இடையிலான ஓர் உரையாடலின் போது, அமெரிக்காவும் இந்தியாவும் ''இந்தோ - பசுபிக் பிராந்தியம் எங்கிலும்'' அவற்றின் இராணுவ-பாதுகாப்பு கூட்டுறவை விரிவாக்க ஒப்புக் கொண்டதாக அண்மையில் வெள்ளை மாளிகை அறிவித்தது.

முதல் படியாக, அவ்விரு நாடுகளும் அவற்றின் வெளியுறவு மற்றும் பாதுகாப்பு அமைச்சர்களை உள்ளடக்கிய ''மந்திரிகள் அளவிலான இருவருக்கு-இருவர் (2-by-2) பேச்சுவார்த்தையை'' தொடங்கி, ''அவற்றின் மூலோபாய ஆலோசனைகளை அதிகரிக்கும்.



அதற்கு அடுத்த நாள் வொஷிங்டன் அறிவிக்கையில், சர்ச்சைக்குரிய காஷ்மீரில் இந்திய ஆட்சியை எதிர்க்கும் ஓர் இஸ்லாமிய போராளிகள் குழுவான ஹிஜ்புல் முஜாஹிதீன் அமைப்பை ஒரு ''வெளிநாட்டு பயங்கரவாத அமைப்பாக'' பட்டியலிட்டிருப்பதாக அறிவித்தது. ஆச்சரியத்திற்கிடமின்றி, இந்நகர்வு இந்தியாவால் மனமுவந்து வரவேற்கப்பட்டது. முஸ்லிம் பெரும்பான்மை காஷ்மீர் பகுதியில் புதுடில்லி மீதான எதிர்ப்புக்கும் மற்றும் பெரிய அந்நியப்படலுக்கும் பாகிஸ்தான் அரசு - ஆதரவிலான பயங்கரவாதமே, முழுமையாக இல்லையென்றாலும், பிரதானமாக உள்ளதென புதுடில்லி வாதிடுகிறது. இதை இஸ்லாமாபாத் கடுமையாகக் கண்டனம் செய்து வருகிறது.



அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் ரெக்ஸ் ரில்லர்சன், பாதுகாப்புத் துறை செயலர் ஜேம்ஸ் மாட்டிஸ் மற்றும் ஜப்பானிய அமைச்சர்களான Taro Kono மற்றும் Itsunori Onodera ஆகியோருக்கு இடையிலான ''இருவருக்கு-இருவர்'' சந்திப்பு, அமெரிக்காவும் ஜப்பானும் ''அப்பிராந்தியத்தின் ஏனைய பங்காளிகளுடன் சேர்ந்து, குறிப்பாக கொரிய குடியரசு, ஆஸ்திரேலியா (மற்றும்) இந்தியாவுடன் சேர்ந்து, முத்தரப்பு மற்றும் பல்தரப்புப் பாதுகாப்பு மற்றும் இராணுவக் கூட்டுறவை முன்னெடுக்க'' கூட்டாகப் பணியாற்றுவதென முடிவெடுத்தனர்.



இது, வடகொரியா அதன் அணுஆயுத மற்றும் தொலைதூர ஏவுகணைப் பரிசோதனைகளை ஒருதலைபட்சமாக நிறுத்திக் கொள்ள வேண்டுமென்ற அமெரிக்க கோரிக்கைகளுக்கு அது தலைவணங்க மறுத்ததற்கு ஒரு விடையிறுப்பாகக் காட்டப்பட்டது. ஆனால், ட்ரம்ப் நிர்வாகம் எட்டு மாதங்களுக்கு முன்னர் பதவிக்கு வந்த பின் திட்டமிட்டு தூண்டிவிட்டுள்ள வடகொரிய நெருக்கடி, அனைத்துக்கும் மேலாக பியொங்யாங்கின் அண்டை நாடும் பிரதான கூட்டாளியுமான சீனாவை மூலோபாயரீதியில் தனிமைப்படுத்த, சுற்றிவளைக்க மற்றும் பீதியூட்டுவதற்கான அமெரிக்க ஏகாதிபத்திய முனைவால் ஏற்பட்டதாகும்.

கடந்த கால்-நூற்றாண்டு காலமாக வொஷிங்டன் தான் ஒரு நாடு மாற்றி ஒரு நாட்டின் மீது சட்டவிரோதமாக படையெடுத்துள்ளது என்கின்ற போதிலும், சீனாவுக்கு எதிரான வொஷிங்டனின் இராணுவ - மூலோபாய தாக்குதலுக்குள் இந்தியா முன்பினும் ஆழமாக ஒருங்கிணையும் பாகமாக, சிறிய, வறுமைப்பட்ட ஒரு நாடான வடகொரியாவை உலக அமைதிக்கு ஒரு பிரத்தியேக அச்சுறுத்தலாக சித்திரிக்கும் அமெரிக்காவின் நிலைப்பாட்டை திரும்பத் திரும்ப கூறுகின்றது.

**இந்தியாவை சீனாவுக்கு எதிர்ப்பலமாக கட்டமைப்பதும் மற்றும் அமெரிக்காவின் மூலோபாய நோக்கங்களுடன் அதை பிணைப்பதுமே வொஷிங்டனின் ஒரு மத்திய மூலோபாய குறிக்கோளாக இருந்துள்ளது.**

முன்பில்லாத வகையில் வடகொரியா மீது ''ஆத்திரம் மற்றும் சீற்றத்தை'' மழையெனப் பொழியவதற்கான ட்ரம்பின் பொறுப்பற்ற அச்சுறுத்தல்களுடன், மோடி இந்தியாவையும் அச்சுறுத்தும் வகையில் அணிசேர்த்துள்ளார். அவர்களது அண்மைய உரையாடலின் உரை வடிவத்தின்படி, வடகொரிய ஆபத்துக்கு எதிராக உலகை ஒருங்கிணைப்பதில், ட்ரம்பின் பலமான தலைமைக்காக பிரதமர் மோடி ஜனாதிபதி ட்ரம்புக்கு நன்றி தெரிவித்தார்.

(கேள்வி தொடரும்)

# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



78




## அத்தியாயம் - V

## சுற்றிவளைப்பில் இருந்து தப்பி ஓட்டம்

தாராள குணமும் பரிவும் கொண்ட இந்த இளம் பெண்களின் பராமரிப்பில் இரண்டு நாள்கள் அசம்பாவிதம் எதுவும் இன்றிக் கழிந்தன. தொடர்ந்தும் அந்த வீட்டில் நாம் இருந்தால் அனைவருக்கும் ஆபத்தாக முடியும். ஆனால், தமக்கு வரக்கூடிய ஆபத்தைப் பற்றிப் பொருட்படுத்தாது, எவ்வளவு வேண்டுமோ அத்தனை காலம் நாம் தம் வீட்டில் தங்கலாம் என்று, இந்தக் குடும்பம் உறுதியளித்தது. எமது அடுத்த விடுதி என என்ற விசாரணைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அதிஷ்டவசமாக சூசை அங்கே வந்தார். எமக்கு ஏற்பட்ட சொல்லொணா இடுக்கண் பற்றியும் நாம் எவ்வாறு தப்பிப் பிழைத்துக் கொண்டிருக்கிறோம் என்பது பற்றியும் அவருக்கு முழுமையான விவரங்கள் கிடைத்திருக்கின்றன. காலநிலையும் கடல் நிலையும் சீரடையத் தொடங்கி இருந்ததால் வடமராட்சியை விட்டு நாம் வெளியேறுவதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. சூசையிடம் இருந்து வந்த இந்தச் செய்தி, எம் முகத்தில் மலர்ச்சியைக் கொண்டு வந்தது. மறுநாளே, இறுதி ஆயத்தங்களுடன் தாம் வருவார் என்று அவர் உறுதியளித்தார். அதே சமயம் தமிழ்நாட்டு முதலமைச்சர் 1987ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி காலமாகி விட்டமையைச் செய்தி ஒலிபரப்புக்கள் தெரிவித்தன. தேசிய துக்க தினமும் போர் நிறுத்தமும் அறிவிக்கப்பட்டன. முதலமைச்சருக்கு மரியாதையாக அமைதிப் படைகள் தங்கள் பாசறைகளில் முடங்கி இருக்கும் என்று கூறப்பட்டது. இது ஒரு விதியின் விளையாட்டு. தமிழ்நாட்டில் நாம் இருந்தபோது அமைப்பின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் காலாக இருந்து, சென்னையில் நாம் இருந்தபோது பாலாவின் மருத்துவ சிகிச்சைக்கு நிதியளித்துப் பேருதவி புரிந்த அந்தப் பெரிய மனிதர் தமது மறைவிலே கூட எமக்கு உயிர் அளிப்பதில் பெரும் பங்கு வகித்தார்.

எமது இந்த சகாப்தத்தின் இறுதிப்படிகளுக்கான ஆயத்தங்களைப் புரியுமாறு சூசை எம்மிடம் கூறினார். டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி சாயந்தரம், இரண்டு போராளிகள் சைக்கிளில் வந்தார்கள். வடமராட்சி ஒரு மூலையில் இருந்து வடகரைத் திக்கத்தில் எமக்காகக் காத்திருக்கும் படகு ஒன்றில் ஏற்ற எம்மை அழைத்துச் சென்றார்கள். பிரியாவிடை பெறும்போது, அந்த இளம் பெண்களிடமும் அவர்களுடைய தந்தையிடமும் எனது நன்றியையும் பாராட்டுணர்வையும் தெரிவிக்க வார்த்தை இன்றித் தடுமாறினேன். நாம் சென்ற பின் அவர்களுக்குக் கெடுதி எதுவும் நேரக்கூடாது என்று எம் அடி மனதில் நாம் ஆசித்ததை அவர்கள் அறிந்திருக்கமாட்டார்கள். அவர்களுக்கு எதுவும் நேரவில்லை. தர்மத்தின் விதிகள் நிலைபெற்றன. இந்த நல்ல மனிதரின் வீட்டில் நாம் அடைக்கலம் பெற்றமையைப் பற்றி இந்தியர் அறிய வரவேயில்லை. மலர்ந்த புன்னகையோடு எம்மைச் சூழ்ந்து நின்றவர்களிடம் பிரியாவிடை பெற்று, சைக்கிளில் புறப்பட்டோம். உலவும் படையினரின் பிரசன்னம் இல்லாத அன்றைய நாளில் மக்கள் தங்கள் முன்வாயிலில் கூடி நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். சைக்கிள் முன்தண்டு இருக்கையில் ஒருக்களித்து இருக்கும் என்னை, கைகளை அசைத்து வழியனுப்பினார்கள்.

## இறுதியான சவால்

பெரும் படைபலத்துடன் ஈவிரக்கமற்ற முறையில் கடுமையாக நடத்தப்பட்ட மனித வேட்டையில் தெய்வாதீனமாக நாம் உயிர் பிழைத்திருந்தோம். நாம் முகம் கொடுத்து வெற்றிகண்ட உயிருக்குப் பங்கம் விளைவிக்கும் மிகக்கொடிய அந்தச் சூழலை விடப் பயங்கரமான வேறு சூழல் எதுவும் இருந்திருக்க முடியாது. மிக மோசமான நிலையை நாம் கடந்து வந்துவிட்டோம் என்றே கருதினேன். அடுத்து, பாக்கு நீரிணையைக் கடந்து தமிழ் நாட்டுக்கு நாம் புரியவிருந்த கடற்பயணம் ஓர் உல்லாசப் பயணமாக இருக்கமாட்டாது என்றாலும், அந்த நாள்வரை நாம் முகங்கொடுத்த கஷ்டங்களோடு ஒப்பிடும்போது, அந்தப் பயணம் அவ்வளவு மோசமாக இருக்கமாட்டாது என்று நம்பினேன். கடற்கரையை அடைந்து இந்தியாவுக்குப் படகு ஏறிவிட்டால், சில மணி நேரத்தில் எமக்குப் பாதுகாப்புக் கிடைத்து விடும் என்று எதிர்பார்த்தேன். ஆனால், அது எந்தப் பெரிய தவறு. தரையிலே உயிர் பிழைக்க எவ்வாறு போராடினோமோ, கடலிலும் அதே போராட்டத்தை நாம் எதிர்நோக்க நேர்ந்தது. நாம் ஏற்கனவே எதிர்நோக்கி வெற்றிகொண்ட அதே வகை இடர்பாடுகளை எமது புதிய பயணத்திலும் எதிர்நோக்க நேர்ந்தது.

திக்கம் கரையை அடைந்த போது எமது பழைய நண்பர்கள், சிலர் எம்மோடு மீளச் சேர்ந்து கொண்டார்கள். அவர்களும் எம்மைப்போல ஓடிக்கொண்டிருந்தவர்கள். கடற்பயணத்தில் எம்மோடு சேர்ந்து கொள்ளக் காத்திருந்தார்கள். சூசையும் அங்கு வந்திருந்தார். அவர், நாம் புறப்படுவதற்கு முந்திய ஏற்பாடுகளைக் கவனித்தார். பயணம் புறப்படும் முன் என்னைத் தயார்படுத்திக் கொள்வதற்காக, பயணம் எவ்வளவு நேரம்பிடிக்கும் என்றும் சூசையிடம் கேட்டேன். நான்கு மணிநேரம் என்று உடன் பதில் வந்தது. நான்கு மணிநேரமா? இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்தபோது ஒரு மணிநேரமே பிடித்தது. இந்தப் பயணம்நீளமாகவேஇருக்கப்போகின்றது ஆனால், சமாளித்து விடுவேன் என்று எனக்குள் அமைதியாகக் கூறிக்கொண்டேன். ஆனால் புறப்படும்முன், வெண் மணலில் இறங்கிப் படகை நோக்கி நடந்தபோது அச்ச உணர்வு என்னைக் கௌவியது. பருவகால மழை ஓரளவு விட்டுக்கொடுத்தது என்றபோதிலும், குளிர் காற்று, கடலைக் கெம்ப வைத்திருந்தது. பயணம் ஒரு சவாலாகவும் அச்சமூட்டுவதாகவும் அமையப் போகிறது என்று பட்டது. கொந்தளிக்கும் கடல், முன்னே விரிந்து கிடந்தபோதும், பயணம் பற்றித் தோன்றிய அச்சத்தையும் மனதில் பின்னே தள்ளினேன். கடந்த சில மாதங்களாக எதிர்த்த தடைகளை வெற்றிகண்ட எனக்கு, இந்த கடற்பயணம் கூட வெற்றிகொள்ள வேண்டிய இன்னொரு தடை என்று நினைத்தேன். ஆனால், அலையடிக்கும் கடலில் நாம் செல்லவிருந்த படகைப் பார்த்ததும் எனது நம்பிக்கை ஒரு கணம் அதிர்ந்தது. அது ஒரு சிறிய கண்ணாடி இழைப்படகு. அதன் கடையாரில் எட்டுப்பரி வலு இயந்திரங்கள் இரண்டு இணைக்கப்பட்டிருந்தன. குமுறும் கடலின் சவாலை இந்தப் படகு எப்படிச் சமாளிக்கப்போகின்றது என்று ஒரு கணம் திகைத்தேன். எனக்கு வேறு வழி இருக்கவில்லை. சூசையின் அனுபவத்திலும் திறமையிலும் நம்பிக்கை வைக்க வேண்டி இருந்தது. எம்மை அழிவுப் பாதையில் அவர் அனுப்பி வைக்கமாட்டார் என்று உறுதியாக நம்பினேன். என்ன இருந்தாலும் எமது எத்தனையோ போராளிகள் இதே படகைப் பயன்படுத்தி, கடலைக் கடப்பதில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள். எத்தனையோ மீனவர், இத்தகைய படகுகளில், இத்தகைய இயற்கைச் சக்திகளை எதிர்கொண்டிருக்கிறார்கள். இயற்கையுடனான இந்தப் போராட்டத்தில் நாம் வெற்றிகண்டு, இந்தியாவைச் சென்றடைந்தால், முட்டிமோதும் கோடிக்கணக்கான மக்கள் மத்தியில் நாம் காணாமற்போய், உயிர் தப்பிப் பிழைக்கக் கூடுமாயிருக்கும் என்று என் மனதைத்திடப்படுத்தினேன். யாழ்ப்பாணத்தில் நாம் இருந்தபோது, மரணம் எம்மைத் துரத்திக் கொண்டிருந்தது. வாய்ப்பு எதுவும் இல்லை என்ற கட்டத்தில் சிறிது வாய்ப்புக் கிடைத்தாலும் அதைப் பெரிது என்று கொள்ளக்கூடியது தானே? எம்மை எதிர்நோக்கும் ஆபத்துக்களைப் பொருட்படுத்தாதவளாக எமது பைகளைப் படகில் ஏற்றிக்கொண்டு பயணம் புறப்பட்டோம்.

நாம் செல்லப்போகும் திசையில், விரைவாக இருள் படியத் தொடங்கியது. வானிலே காணப்பட்ட கரிய மேகமும் சூழலை மங்கலாக்கிக் கொண்டிருந்தது. நேரம் போகப் போக ஓர் அவசர உணர்வு படியத் தொடங்கியது. நாம் இன்னமும் புறப்படாமல் நின்றோம். படையினர் இரவில் வெளியே வருமுன்னர் அந்த இடத்தை விட்டு அகன்றுவிடவேண்டும் என்று எமது போராளிகள் விரும்பினார்கள். எனவே, படகில் ஏறி, உள்ளே தரையில் உட்கார்ந்தோம். விரைவில், சூசையும் டசின் கணக்கிலான போராளிகளும் ஓங்கி அடிக்கும் அலைகளினூடாக சமுத்திரத்துக்குள் எங்கள் படகை தள்ளிச் சென்றார்கள். இயந்திரங்கள் முடுக்கி விடப்பட்டன. எமது பயணம் தொடங்கியது. கரையிலிருந்து படகு எட்டத்தே செல்ல, குற்ற உணர்வும் துயர உணர்ச்சியும் திடீரென என்னை மேவின. இதுநாள் வரை நாம் முகம் கொடுத்து வந்த நெருக்குவாரங்களின் போது மானுட உயர் சீல மாணிக்கங்கள் சிலருடன் நான் உறவு பூண நேர்ந்தது. எமது அவல வேளையில், எமக்காகத் தாம் பேரிடரைச் சந்தித்துத் தியாகம் புரிய அவர்கள் புரிந்த அர்ப்பணிப்புக்கள். அவர்களுடைய அடி மனதிலிருந்து கிளர்ந்த ஒப்பற்ற பண்புகளாகும். அவர்களோடு ஆழமான பிணைப்பு என் மனதில் ஏற்பட்டிருந்தது. எனவே, நாம் புறப்பட்ட கரை என் பார்வையில் இருந்து மறையத் தொடங்க எமது நம்பிக்கைக்குரிய நண்பர்களை ஒரு நிச்சயமற்ற எதிர்காலத்துக்குள் கைவிட்டுச் செல்லும் உணர்வே என்னுள் மிதந்து வந்தது. போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களோடு சேரவேண்டும் என்று பல ஆண்டுகளாகக் காத்திருந்து விட்டு யாழ்ப்பாணத்தில் சில மாதங்களே வாழ்ந்த போதிலும் தமிழ் மக்கள் முகம் கொடுத்த ஒடுக்குமுறையையும் அடி மனத்துயரையும் அவர்களோடு பகிர்ந்து கொண்டிருந்தேன். அவர்களுடைய கையறு நிலையில் அவர்களை விட்டுச் செல்வது துயரமாக இருந்தது. அதேவேளை, ஆறுதல் உணர்வும் ஏற்பட்டது. வேட்டையாடப்பட்ட நெருக்குவார உணர்வும் அகன்றிருக்கிறது. ஆனால், ஆறுதல் உணர்வு சிறிது நேரமே நிலைத்திருந்தது.

(தொடரும்...)

மண்டைதீவு கை.பேரின்பநாயகம்

(நேற்றைய தொடர்ச்சி..)



# மண்டைதீவை சின்னாபின்னமாக்கின 'சகடை' களும் ஹெலிகளும்!

மண்டைதீவு, அல்லைப்பிட்டி கிராமங்கள் உயிரோடு புதைக்கப்பட்ட கோட்டை படை நடவடிக்கையின் 27 ஆவது ஆண்டின் நினைவு நாள்

**ஹெலி, பீராங்கிப் படகுகளின் குண்டுகள் சீறிப்பாய்ந்தன**

மண்டைதீவுப் பகுதியைக் குறி வைத்த ஹெலிகள், பண்ணை - மண்டைதீவு சந்தி மேலாக பறந்து மண்டைதீவின் கிழக்கு கரையை கண் மண் தெரியாது தாக்கின. பாலைதீவு மற்றும் கல்முனை கடல் பகுதியில் நின்ற கடற்படை பீரங்கிப் படகுகள் 'கனன்' என்ற பீரங்கிக் குண்டுகளை வீசத் தொடங்கின.

அறம் புறமாக வட்டமான அந்தக் குண்டுகள் மஞ்சள் நிற மருந்தோடு வந்து வெடித்துச் சிதறி அநியாயம் பண்ணின. வெடுக்கான மணத்தோடு நாறி புகைந்தன. 'சாப் நெல்ஸ்' (Sharp Nel) பீசுகள் வெடித்துச் சிதறி வெண்கப் பாத்திரங்களைக் கூட வெட்டித் துளைத்துச் சென்றன. மண்டைதீவு மீண்டுமொருமுறை அல்லைப்பிட்டி பரவைக் கடலூடாக ஓடத்தொடங்கியது. ஹெலிகள் வரும் பாதையை நோக்கியே ஓடவேண்டி இருந்தது. பண்ணையாழ். வீதியூடான போக்குவரத்துத் தடைப்பட்டுப் போய் இருந்தது.

மண்டைதீவின் கிழக்குக் கடற் பகுதி யூடாகக் குருநகர் மற்றும் பாசையூர் பகுதிக்கான படகு சேவை யும் கடலில் கப்பல்களை கண்ட நாள் முதலாக நிறுத்தப்பட்டு இருந் தது.

வேலணை - அராலிதுறை மூல மான படகு சேவையும் தடைப்பட்டுப் போனது. கஜபாகு படையின் தலைமையில் நிதானமாக பீரங்கிகளை கவச வாகனங்கள் வெடிகளைத் தீர்க்க பெல்ஜியத்துள் ஜேர்மனியப் படைகள் எதிர்ப்பில்லாமல் நுழைந்த மாதிரி வேலணை சந்திவரை நகர்ந்தது. மாலையில் துறையூரை தவிர்த்து மண்கும்பான் சந்தியில் (பிள்ளையார் கோவிலடி) இருந்து முஸ்லிம்கள் இருந்த சாட்டி மசூதிகளைத் தவிர்த்து மண்கும்பான் அல்லைப்பிட்டி, மண் டைதீவு பகுதிகளை முற்றுகை செய் திருந்தன. தீவகத்தின் தலைத்தீவான மண்டைதீவும் பெரிய தீவான லைடன் தீவும் (இது இப்பொழுது வேலணை தீவு எனப்படும்) குலைநடுங்கிப் போயின.

அல்லைப்பிட்டியில் இருந்த பிலிப்பு நேரியர் யுவினியா ஆகிய இரண்டு கிறிஸ்தவ (R.C) தேவால யங்களும் மக்களால் நிரம்பியிருந்தன. வளவு, வாய்க்கால் எங்கும் சனம். குழந்தைகளின் கத்தல் ஒருபுறம் ஒரே இரைச்சல்.

சனங்களால் அல்லைப்பிட்டி கிராமத்தின் மனல்கரை வீதிகள் நிரம்பி வழிந்தன. மண்கும்பான் சாட்டி பகுதியில் இருந்து கிழக்காக அல்லைப்பிட்டிக்கு ஓடி வந்தவர்களும் மேற்காக அதிகாலை தாக்குதலில் மண்டைதீவின் முழுச்சனங்களும் அல்லைப்பிட்டியை நிறைத்தன. நெருக்கடி இரைச்சல் குழந்தைகளின் அழுகுரல், பசி, தண்ணீர் பற்றாக்குறை காரணமாக முன்னரங்க கிராமம் இரண்டும் திகைத்து செய்வதறியாது வெம்பியது. மீண்டும் மண்டைதீவை நோக்கி மக்கள் திரும்பினர்

இந்தச் சனக் கூட்டத்துக்கு மத்தி யில் ஒரு தோட்டா சன்னமோ அல்லது ஷெல் தாக்குதலோ நடந்தால் இழப் புகள் அதிகமாகும் என மக்கள் உணரத் தலைப்பட்டனர்.

இந்நிலையில் உலக சேவையின் இரவுநேர ஒலிபரப்பு சேவை ஒன்றை செவிமடுக்கக் கூடியதாக இருந் தது.

சைக்கிளில் இருந்த டைனமோ வைப் பயன்படுத்தி வாலிபர் ஒருவர் தனது சிறிய வானொலிப்பெட்டியை இயக்கிக்கொண்டு இருந்தார். சைக் கிள் சில்லின் 'கட புட' சத்தத்தோடு செய்தி தெளிவாகக் கேட்கக்கூடியதாக இருந்தது.

''தேம்சு நதிக்கரை இருந்து...'' என்ற பாடலைக் கேட்டதும் ஒரு கூட் டம் அவரை மொய்த்துக் கொண்டது. செய்தியின் சாரம் இதுதான்:-

யாழ். குடாநாட்டின் தீவுகளில் ஒன்றான லைடன்தீவு இலங்கை இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட தாகவும் யாழ். டச்சுக் கோட்டையை அண்மித்த கடற்பகுதியில் இருக்கும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மண் டைதீவை விரைவில் கைப்பற்று வதற்கான ஆயத்தங்களை இலங்கை இராணுவம் மேற்கொண்டுள்ளதா கவும் தெரிந்தது. அந்தச் செய்தியை ஒலிபரப்பிய அந்தப் பெண்குரல் மிகவும் அதிர்ச்சியான தகவலை ஏன் பொய்யாகச் சொன்னது என்பது மட் டும் புரியவில்லை.

இந்தத்தீவு, ஆள்கள் நடமாட்ட மில்லாத தீவு. இங்கு மக்கள் குடியி ருப்புகள் இல்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக மீன்பிடிக்க வந்து போவோரின் குடிசைகள் மட்டுமே உண்டு என்று முழுப்பொய் கூறியது. செய்திக்கு ஆதாரமாக இலங்கை இராணுவத் தலைமைப்பீடத்தை சுட் டித்துக் காட்டியது.

அன்று காலை மண்டைதீவு கிராமத் தில் நடந்த ஹெலிக்கொப்டர் மற்றும் விமானத் தாக்குதலைத் தொடர்ந்து அங்கு இடம் பெயராதிருந்த ஆறா யிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அதையும் அல்லைப்பிட்டி கிராமத் தையும் பிரிக்கும் பரவைக்கடலை உடுத்த உடையுடன் ஒரு சொப்பிங் பை கூட இல்லாது கடந்து வந்து, இழுத்து வந்த குஞ்சு குருமான்களை இருத்த இடம் இல்லாது இருத்தி விட்டு ஓட்டமும் நடையுமாக வந்த களைப்போடும் ஏக்கத்தோடும் இருந்த அம்மாமாரின் காதில் இந்தச் செய்தி நாராசமாகப் பாய்ந்தது.

தீவகம் அதிர்ந்து போனது. பிரதானி கொப்பகடுவவின்இலக்குலைடன்தீவு மட்டுமல்ல மண்டைதீவும் என இனங் காணப்பட்டது. மக்களுக்கு ஏற்படும் இழப்பை இல்லாது காட்ட மண்டைதீவு ஆள்கள் இல்லாத மாடு மேயும் பிட்டியாக வெளிநாடுகளுக்கும் ஊடகங்களுக்கும் காட்டப்பட்டது.

இதேவேளை, உண்மையில் என்ன நடக்கிறது என்பது யாழ்ப்பாண மக் களுக்கே அதுவரை சரியாகத் தெரிய வில்லை.

மண்டைதீவு சனங்கள் திடீரென ஒரு முடிவுக்கு வந்தனர். ''இஞ்ச கிடந்து தெருவில சாக ஏலாது. எங்கட சொந்த வீடுகளில் போய் சாவம்'' என்ற பெண் குரலுக்கு எந்த எதிர்ப்பும் எழவில்லை.

ஆனால், யாழ். கோட்டையில் இருந்து எய்யப்பட்ட பரா வெளிச்ச த்துக்குப் பயந்து பாதிப்பேர் மீண்டும் திரும்பினர்.

இரவு நேரம் வானூர்திகள் சுற்றித் திரியவில்லை. 'டக்கும்' என்று கனன் ஷெல் வீசும் கப்பல்களும் பீரங்கிப் படகுகளும் ஓய்வெடுத்திருந்தன. இவை அரைமணிநேரம் தொடர்ந்து பகலில் குண்டு வீசும். மீண்டும் அரைமணிநேரம் ஓய்வெடுக்கும். 'ஹீற்' ஏறினால் பீரங்கி பழுதாகி விடும். இந்த இடைவெளியில் வானூர்திகள் பகலில் தாக்குதல் நடத்தி இரு ந்தன.

இரவு மௌனமாகக் கழிந்தது. அடுத்தநாள் விடிந்ததும் மீண்டும் தாக்குதல் ஆரம்பமானதும் பீரங்கிக் குண்டுபட்டுச் சனங்கள் செத்துப் போயினர். பங்கர்கள் பாதுகாப்பாக இருந்ததால் கடற்படை விமானப் படைத் தாக்குதலில் இருந்து ஓரளவு பாதுகாப்பைத் தந்தன.

அடுத்த வீட்டில் அந்த இரவிலும் பங்கர் வெட்டும் ஆரவாரம் கேட்டுக் கொண்டு இருந்தது. பிள்ளையார் கோவிலைச்சுற்றி மக்கள்நிறைந்தனர். திக்கற்றவருக்குத் தெய்வம் தானே துணை.

**ஓகஸ்ட் 25 இன் அதிகாலைப் பொழுது துயரத்தோடு விடிந்தது**

அடுத்த நாள் எதிர்பார்த்தபடி பீரங்கி முழக்கத்தோடு விடிந்தது. ஹெலிகளும் துப்பாக்கிகளினது தோட்டாக்களும் வீடுகளின் கூரை களை பிய்த்தெறிந்தன. சொந்த பந்தங்களுடன் இருப்பதற்காக ஒரு பங்கரில் இருந்து மற்றைய பங்கருக்கு இடம்மாற ஓடிச் சென்றவர்கள் பீரங்கிக் குண்டுபட்டு உடல் சிதறிப் போயினர். பங்கரை இழுத்து மூடு வதைத் தவிர வேறு வழி இருக்க வில்லை.

## வீடுகள், பாடசாலைகள் தரைமட்டம்; கணக்கு வழக்குத் தெரியாத சாவுகள்!!



மண்டைதீவை வட்டமடித்து வானத்துப் பறவைகள் அல்லைப் பிட்டியை துவம்சம் செய்தன. காலைப்பொழுதில் அல்லைப்பிட்டி பராசக்திவித்தியாலயமும் அருகில் இருந்த வீடுகளும் 'சகடை' என் றழைக்கபட்ட சீனாவின் குண்டுவீச்சு விமானத்தால் 'பீப்பா' குண்டு வீசப்பட்டுச் சிதறடிக்கப்பட்டன. புலனாய்வுப் பிரிவினரின் பிழையான தகவலால் பராசக்தி வித்தியாலயம் மண்மூடிப் போனது. (இராணுவம் போனபின் பார்த்த பொழுது அடித் தளம் கூடக் காணப்படவில்லை.

(தொடரும்)



# வம்புக்கு இழுக்கிறது அமெரிக்கா: எதையும் சமாளிக்க வடகொரியா தயார்!

அமெரிக்காவின் பசுபிக் பிராந்தியமான குவாமை நோக்கி, ஏவுகணைச் சோதனை நடத்தப் போவதாக வட கொரியா அச்சுறுத்தல் விடுத்துள்ளது. வடகொரிய தீபகற்கத்தில் மிகவும் பதற்றமான சூழல் நிலவும் நிலையில், அமெரிக்காவுக்கு பதிலளிக்கும் விதமாக இந்த மிரட்டலை வடகொரியா விடுத்துள்ளது.

பியொங்யாங்குக்கும், அமெரிக்க அதிபருக்கும் இடையிலான வார்த்தைப் போர் முற்றி வரும் வேளையில், வட கொரியாவின் அணு ஆயுத மற்றும் ஏவுகணைத் திறன்கள், சர்வதேச சமூகத்தின் கவலையை அதிகரிக்கச் செய்துள்ளது.

ஆனால், வட கொரியாவுக்கும் அதன் தலைவர் கிம் ஜோங் - உன்னுக்கும் தேவைப்படுவது என்ன?

தனது நிலையையும் பிராந்தியத்தின் தத்துவத்தையும் அலுவல்பூர்வ அறிக்கை மூலம் பியொங்யாங் தெளிவுபடுத்தியுள்ளது. தொலைக்காட்சி, வானொலி, நாளிதழ்களில் அது திரும்பத் திரும்ப வெளியாகி வருகிறது.

### தேசத்தின் "வாழ்வுரிமை"

சுயபாதுகாப்புத்தான் வடகொரியாவின் பிரதான கவலை. ''மிகப்பெரிய சக்திவாய்ந்த எதிரிக்கு எதிராக இருக்க வேண்டும்'' என்ற நோக்குடன் போர்க்களத்தில் உள்ளதாக அந்நாடு கூறுகிறது.

அதனால், தனது சுயபாதுகாப்பை உறுதிப்படுத்த அணுஆயுத பலத்தை பயன்படுத்துவது தனது உரிமை என்று வடகொரியா கூறுகிறது.

''நிச்சயமாக இது ஒரு சுய பாதுகாப்புக்கான சரியான நடவடிக்கை என்றும், நாட்டின் இறையாண்மை மற்றும் அமெரிக்காவின் அத்துமீறிய கட்டுப்பாட்டுக்கு அடிபணியக் கூடாது என்பதற்காகவும், மிக சக்தி வாய்ந்த அணு ஆயுத படை பலத்தைக் கொண்டிருப்பது தனது உரிமை'' என்றும் வட கொரிய செய்தி நிறுவனமான கே.சி.என்.ஏ. கருத்துத் தெரிவித்துள்ளது.

### போரின் நினைவுகள்

அமெரிக்கா வழிநடத்திய ஐ.நா. படைகளுக்கும் வடகொரியாவுக்கும் இடையிலான போரின் நினைவு, அந்நாட்டில் அதிக அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

''ஏராளமான மனித உயிரிழப்புகளுக்கும் கிட்டத்தட்ட வடகொரியாவின் நகரங்களும் தொழிற்சாலைகளும் அழிந்ததற்கு அமெரிக்காவே காரணம்'' என்று அந்நாடு குற்றம்சாட்டி வருகிறது.

கடந்த ஒகஸ்ட் 7-ஆம் திகதி அரசு வெளியிட்ட அறிக்கையில், ''ஒருமுறை அமெரிக்கா நடத்திய சோகமான போரின் விளைவால், வடகொரிய நிலம், இரத்தமும் நெருப்பும் கலந்த கட லாக காட்சியளித்தது. கொரிய ஜன நாயக மக்கள் குடியரசின் (டி.பி.ஆர்.கே.) தத்துவம் மற்றும் ஆட்சிமுறையை பூண்டோடு அழிப்பதற்காக நடத்தப்பட்ட அந்த தாக்குதலின் சுவடுகள், நூற்றாண்டுக்கு பின் நூற்றாண்டாக நீங்காமல் நினைவில் இருக்கும்'' எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

வடகொரிய போரைப் பற்றியும், அமெரிக்காவுக்கு எதிரான போராட்டம் மற்றும் மிரட்டலுக்கு எதிராகவும் வடகொரிய அதிகாரிகள் கூறும் போது, வரலாற்றில் பதிவான சம்பவங்களை மேற்கோள்காட்டி எப்போதும் பேசுவர்.

கிழக்கு ஆசியாவில் அமெரிக்காவின் அணு ஆயுதங்கள் நிலைநிறுத்தப்பட்டுள்ள வரை, அமெரிக்காவிடம் இருந்து வரும் அச்சுறுத்தல்கள் ''உண்மையானவை'' என்றே வடகொரியா பார்க்கிறது.

கிம் ஜோங் - உன் அரசை வீழ்த்துவதற்கான அமெரிக்காவின் முயற்சி என பியொங்யாங் மீண்டும் மீண்டும் குற்றம்சாட்டி வருகிறது.

''1950-ஆம் ஆண்டில் கொரிய போர் தொடங்கியது முதல், கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்கா திட்டமிடும் சதி மற்றும் ஆக்கிரமிப்பு முயற்சியின் விளைவு இது; அது இன்றளவும் தொடர்கிறது'' என்று பியொங்யாங் கூறி வருகிறது.

கொரிய மக்கள் இராணுவம் கடந்த 9-ஆம் திகதி வெளியிட்ட செய்திக் குறிப்பில், ''ட்ரம்ப் உள்ளிட்ட அமெரிக்க ஆட்சியாளர்களிடையே காணப்படும் அணு ஆயுதப் போர் வெறி, உண்மையான போருக்கான பொறுப்பற்ற மற்றும் கொந்தளிப்பான நிலைக்கு வித்திட்டுள்ளது'' என்று குறிப்பிட்டுள்ளது. கொரிய செய்தி நிறுவனமான கே.சி.என்.ஏ. கடந்த 9 ஆம் திகதி அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் வெளியிட்ட ஒரு கட்டுரையில், கொரியாவுக்கு எதிராக அமெரிக்கா தொடர்ந்துச் செயற்படுவதாக குற்றம் சாட்டியது.

மேலும், ''கடந்த 60 ஆண்டுகளுக்கு முன்பு 15 ஆதரவு நாடுகளுடன் சேர்ந்து ''ஐ.நா. படைகள்'' என்ற போர்வையில் கொரியா மீதான தாக்குதலை அமெரிக்கா முன்னெடுத்தது. ஆனால், அந்த படையினரை மண்டியிட வைத்தவர் இராணுவம் மற்றும் மக்களை வழி நடத்திய மிகவும் திறமையான தளபதி கிம் இல் சுங். வட கொரியாவுக்கு எதி ரான போரை ஒதுக்கி விட முடியாது எனக் கூறி, தங்கள் நாட்டை அமெரிக்கா வம்புக்கு இழுக்கிறது. அதனால் நாம் அமெரிக்காவின் முக்கிய பகுதிகளையும் அதன் அனைத்து வலிமையான பகுதிகளையும் எந்த விலை கொடுத்தாவது அழிக்க வேண்டும்'' என்று அந்த கட்டுரையில் கே.சி.என்.ஏ. சுட்டிக்காட்டியுள்ளது.

கொரிய போரைத் தொடங்கியது அமெரிக்காதான் என்றும் கிம் இல் சுங்கின் தெற்கு நோக்கிய படையெடுப்பு அதற்குக் காரணம் அல்ல என்றும் பியொங்யாங் கூறுகிறது.

அதேபோல, ''எதிர்காலத்திலே போர் நடந்தாலும், அதற்கு போர் வெறி பிடித்த அமெரிக்காவும் அதன் ஆதரவு நாடுகளுமே காரணம்'' என்று பியொங்யாங் கூறி வருகிறது.

### அணு ஆயுத குவிப்பும் வரலாறும்

லிபியாவிலும் ஈராக்கிலும் உள்ள அரசுகள், அவற்றின் பெரும்பான்மை ஆயுதங்களை ஒப்படைத்த பிறகு, அங்கு ஆட்சியில் இருந்த அரசுகள் அகற்றப்பட்ட சம்பவங்களை வட கொரியா அடிக்கடி கூறி வருகிறது.

இதுபற்றி கேசிஎன்ஏ கூறுகையில், ''சுயபாதுகாப்புக்கான அணு ஆயுதங்களை ஒழித்து விட்டு, அமெரிக்கா மற்றும் பிற தேச விரோத சக்திகளின் வசீகர நெருக்கடிக்கு அடிபணிந்து விட்டால், ஈராக், லிபியா, ஆப்கானிஸ் தான் ஆகிய நாடுகள் எதிர்கொண்ட பேரிடர்கள் மற்றும் துரதிருஷ்டவச நிலையை வடகொரியாவும் அனுபவிக்க நேரிடும்'' என்று குறிப்பிட்டுள்ளது.

வடகொரியாவை ஆக்கிரமிக்கக் காத்திருக்கும் விரக்திமிக்க வெளிச் சக்திகளிடம் இருந்து, நாட்டைப் பாதுகாக்கும் வலிமையான பொக்கிஷம் போல, தனது சக்திவாய்ந்த அணு ஆயு தங்கள் உள்ளன என்பதை வரலாறு நிரூபித்துள்ளது'' என்று கேசிஎன்ஏ கூறியுள்ளது.

### பியொங்யாங்கின் மறு ஒருங்கிணைப்பு விதிகள்

இரண்டு கொரிய நாடுகளையும் ''பியொங்யாங்கின் விதிகளுக்கு உட்பட்டு'' ஒருங்கிணைக்க வேண்டும் என்பது வடகொரிய ஊடகங்கள் அவ்வப்போது வலியுறுத்தி வரும் முக்கிய விஷயமாகும்.

இதுபற்றி ''ரோடொங் சின்முன்'' நாளிதழ் தனது தலையங்கத்தில் ''இராணுவ ஆட்சியின்கீழ் ஒற்றுமை மற்றும் மறுஒருங்கிணைப்புக்கான நமது தேசத்தின் சக்திவாய்ந்த முன்னேற்றத்தை எந்தவோர் எதிர்ப்பு சக்திகளின் சவால்களாலும் முடக்கி விட முடியாது'' என்று குறிப்பிட்டுள்ளது.

''சோஷலிஸம் மற்றும் இராணுவ முன்னுரிமை அரசை வலியுறுத்தும் தனது கொள்கையின்கீழ் தீபகற்க பகுதியை இணைக்க வேண்டும்'' என்ற விருப்பத்தை வடகொரியா தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறது.

மறுஒருங்கிணைப்புக்கான பேச்சுக்கு வலிமை சேர்க்கும் வகையில், தமது ஆயுதங்களை வடகொரியா குவித்து வருவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஒருவேளை அது நடந்து விட்டால், மக்கள்தொகை மற்றும் பொருளாதார ரீதியாக அது தென்கொரியாவுக்கு பலன்களைத் தரும்.

அமைதி வழிகளில் மறுஒருங்கிணைப்புக்கான பேச்சை நடத்த வேண்டும் என்பதில் தென்கொரியா உறுதியாக உள்ளது.

நிதி ஆதாரங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க, ஒருங்கிணைந்து பொருளாதார மற்றும் அரசியல் முறைகளை மேம்படுத்தும் சூழலை ஆராய வேண்டும் என்பதில் இரு நாடுகளும் உடன்படுகின்றன.

மறுஒருங்கிணைப்பை ஜனநாயக வழிகளிலேயே எட்ட வேண்டும் என்ற நிலைப்பாட்டை அமெரிக்காவும் வலியுறுத்துகிறது.

ஆனால், ''தனது விதிகளுக்கு உட்பட்ட ஒருங்கிணைந்த கொரியாவாக இருக்க வேண்டும்'' என்ற தனது நிலைப்பாட்டை விட்டுக்கொடுக்காமல் வடகொரியா உறுதியாக உள்ளது.

புத்தாண்டு உரையின்போது கிம் ஜோங் உன் பேசுகையில், ''சுதந்திரமான மறுஒருங்கிணைப்புக்கான வெற்றியை எட்டுவதற்கு இராணுவம் சார்ந்த அரசியலே சக்திமிக்க ஆயுதம்'' என்றார்.

## தோல்வியில் முடிந்த ஏவுகணைச் சோதனை!

இந்தக் கட்டுரையில் குறிப்பிட்டது போன்று வடகொரிய இராணுவம், கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய மூன்று ஏவுகணைச் சோதனைகளும் தோல்வியில் முடிந்தன என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

வடகொரியாவின் கிட்ட யராங் பகுதியில் இருந்து மூன்று ஏவுகணைகளை வடகொரியா சோதனை செய்ததாக அமெரிக்கா கூறியுள்ளது. அந்த ஏவுகணைகளில் முதலாவது மற்றும் மூன்றாவது சோதனை செய்யப்பட்ட ஏவுகணைகள், பறக்கத் தவறியன எனவும் இரண்டாவது சோதனை செய்யப்பட்ட ஏவுகணை, ஏவப்பட்ட சிறிது நேரத்தில் வெடித்துச் சிதறியது எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.





# ஊட்டச்சத்து குறைபாட்டால் 52 குழந்தைகள் உயிரிழப்பு

ராஞ்சி.ஓக.28

ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள ஜாம்ஷெட்பூர் அரசு மருத்துவமனையில் கடந்த ஒரு மாத காலத்தில் மட்டும் 52 குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைவால் உயிரிழந்துள்ளனர்.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள ஜாம்ஷெட்பூர் நகரில் உள்ளது மகாத்மா காந்தி நினைவு அரச மருத்துவ மனையில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 52 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

குழந்தைகளில் உயிரிழப்புக்கு ஊட்டச்சத்துக் குறைபாடு முக்கிய காரணம் என்று மருத்துவமனை கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.







ஒரு மாத காலத்துக்குள்

முன்னதாக ஜாம்ஷெட்பூர் அரச மருத்துவமனையில் மருந்துகள் பற்றாக்குறையால் நோயாளிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று செய்திகள் வெளியாகி இருந்தன.

120 கோடிக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் ஊட்டச்சத்து குறைபாட்டால் குழந்தைகள் உயிரிழக்கும் சம்பவம் தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

மன்மோகன் சிங் பிரதமராக இருந்த காலத்தில், ஆண்டுக்கு 5 வயதுக்குட்பட்ட பத்து லட்சம் குழந்தைகள் இந்தியாவில் ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் இறக்கின்றனர் என்றும். இந்தியாவில் 48.1 சதவிகித பெண்கள் ரத்தச் சோகையுடன் இருக்கிறார்கள் என்றும் வெளிப்படையாக தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)



ஆந்திர மாநிலம் திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு சென்ற நேபாள பிரதமர் தியூபா தனது குடும்பத்தினருடன் சுவாமி தரிசனம் செய்தார்.

# ஆளுநர் நல்ல முடிவை எடுப்பார்: நம்பிக்கையுடன் தினகரன்!



அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களின் கோரிக்கை குறித்து ஆளுநர் வித்யாசாகர் ராவ் நல்ல முடிவை எடுப்பார் என்று அ.தி.மு.க. (அம்மா) அணியின் துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடவுளைத் தவிர யாராலும் எங்களை மிரட்ட முடியாது. கட வுளுக்கும் உண்மைக்கும் நாங்கள் கட்டுப்பட்டவர்கள். இன்றைக்கு தியாகத்துக்கும், துரோகத்துக்கும் இடையே போர் நடக்கிறது. இந்தப் போரில் தளபதிகளாக 19 பேர் சென்றுள்ளனர்.

பணத்துக்காக வேறு யாரும் வாங்கி விடுவார் கள் என பயந்து கொண்டு செல்லவில்லை. மாபெரும் மக்கள் இயக்கத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற தியாக உணர்வுடன் சென்று அமர்ந்திருக்கின்றனர்.

தமிழகம் மட்டுமல்ல, இந்திய துணைக் கண்டமே மாநிலத்தில் நடைபெற்று வரும் இந்தச் சூழ்நிலையை உற்றுக் கவனித்து வருகிறது. தமிழக சட்டப் பேரவை உறுப்பினர்களின் கோரிக்கையை ஆளுநர் விரைவில் நிறைவேற்றித் தருவார் என்ற நம்பிக்கையில் அவர்கள் அங்கே அமர்ந்துள்ளனர். ஆளுநர் வித்யாசாகர் ராவ் சிறந்த சட்ட மேதை. நிச்சயம் நல்ல முடிவை எடுப்பார் என்ற நம்பிக்கை உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# சி.சி.ரி.வி. கமராவில் சேறு பூசி ஏ.ரி.எம். யந்திரங்கள் அபகரிப்பு!

புனே.ஓக.28

15 லட்சம் ரூபாவுடன் 2 ஏ.ரி.எம். யந்திரங்களை கொள்ளையர்கள் தூக்கிச் சென்ற அதிர்ச்சி சம்பவம் புனேயில் இடம்பெற்றுள்ளது.

மராட்டிய மாநிலம் புனேயில் புனே-அகமதுநகர் நெடுஞ்சாலையில் பாரத ஸ்ரேட் வங்கிக்குச் சொந்தமான ஏ.ரி.எம். மையம் உள்ளது. இந்த மையத்திற்கு கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை வாடிக்கையாளர் ஒருவர் பணம் எடுக்க வந்தார்.

அப்போது மையத்தில் இருந்த 2 ஏ.ரி.எம். யந்திரங்கள் மாயமாகி இருந்ததைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். பின்னர் அவர் இது குறித்து சிக்ராபூர் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளார்.

இதையடுத்து பொலிஸார் விரைந்து வந்து நடத்திய விசாரணையில், சம்பவத்தன்று அதிகாலை 2 மணிக்கு மேல் அந்த ஏ.ரி.எம். மையத்தில் நுழைந்த கொள்ளையர்கள் தங்களை அடையாளம் காணாமல் இருக்க சி.சி.ரி.வி. கமராவில் சேற்றை பூசியுள்ளனர்.



பின்னர் பணத்துடன் இரு ஏ.ரி.எம். யந்திரங்களையும் பெயர்த்து எடுத்தனர். அங்கு தயாராக இருந்த வாகனத்தில் அவற்றை ஏற்றி உள்ளனர். தொடர்ந்து அவர்கள் அகமதுநகர் நெடுஞ்சாலை வழியாக தப்பி சென்றமை தெரியவந்துள்ளது.

கடத்தப்பட்ட ஏ.ரி.எம். யந்திரங்களில் 15 லட்சத்து 62 ஆயிரம் ரூபா இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# தாஜ்மஹால் கோவில் அல்ல; நினைவுச் சின்னம் தான் அது!

ஆக்ரா.ஓக.28

தாஜ்மஹாலுக்குள் எந்தவிதமான கோவிலும் இல்லை. மன்னர் ஷாஜகானால் கட்டப்பட்ட நினைவுச் சின்னம் என ஆக்ரா நீதிமன்றத்தில் கட்டட கலைத்துறை விளக்கம் அளித்துள்ளது.

தாஜ்மஹால் உலகப் புகழ் பெற்றது. அழகு நிறைந்த இந்த கட்டிடம் புராதனமான சிவன் கோவில் என்ற சர்ச்சையும் இருந்து வருகிறது.

பேராசிரியர் ஒக் என்பவர் தனது ஆய்வு நூலில், இது ஜெய்பூர் மன்னன் ஜெய்சிங்குக்கு சொந்தமான சிவன் கோவில். ஷாஜகான் அந்தக் கோவிலை பிடுங்கிக் கொண்டார். அதை திருப்பிக் கேட்டு மன்னர் ஜெய்சிங் எழுதிய மடல் இன்றும் இருக்கிறது. என்று குறிப்பிட்டுள்ளார்.



இந்த நிலையில் 2015ஆம் ஆண்டு 6 வழக்கறிஞர்கள் ஆக்ரா நீதிமன்றத்தில் ஒரு வழக்குப் போட்டனர். அதில் தாஜ்மஹால் இந்து கோவில் என்றும் அதனுள் வழிபாட்டுக்கு அனுமதிக்க வேண்டும்; பூட்டி வைக்கப்பட்டுள்ள அறைகளை திறக்க உத்தரவிட வேண்டும் என்றும் குறிப்பிட்டு இருந்தனர்.

இந்த வழக்கு விசாரணையின்போது இந்திய கட்டடக் கலை துறை சார்பில் அளித்துள்ள விளக்கத்தில் தாஜ்மஹாலை கோவில் என்பதை திட்டவட்டமாக மறுத்துள்ளது. தாஜ்மஹாலுக்குள் எந்தவிதமான கோவிலும் இல்லை. மன்னர் ஷாஜகானால் கட்டப்பட்ட நினைவுச்சின்னம். யாருக்கும் வழிபாட்டு உரிமை இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# ஈராக்கில் இரு மனித புதைகுழிகளில் தலை துண்டித்த 500 உடல்கள்!

பக்தாத்.ஓக.28

ஈராக்கில் 2 புதை குழிகளில் 500 இற்கும் மேற்பட்டோரின் உடல்கள் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஈராக்கில் கடந்த 2014ஆம் ஆண்டில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதிக்கம் தொடங்கியது. அப்போது ஈராக்கின் 2ஆவது பெரிய நகரமான மொசூல் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை கைப்பற்றி இஸ்லாமிய தேசம் என்ற தனி நாடு உருவாக்கினார்கள்.



தற்போது அமெரிக்க இராணுவத்தின் உதவியுடன் ஈராக் இராணுவம் மொசூல் உள்ளிட்ட பெரும்பாலான பகுதிகளை மீட்டுள்ளது. அதைத் தொடர்ந்து அங்கு ராணுவம் ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளது.

மொசூல் அருகே படவுஸ் நகரில் மத்திய சிறைச்சாலை உள்ளது. அங்கு 2 மிகப் பெரிய புதை குழிகள் இருந்தன. அவற்றை இராணுவ வீரர்கள் தோண்டி ஆய்வு மேற்கொண்டனர்.

அந்த 2 புதை குழிகளிலும் 500இற்கும் மேற்பட்டோரின் உடல்கள் புதைக்கப்பட்டிருந்தன. அவை தலை துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்தன. ஒரு குழியில் 470 உடல்களும், மற்றொரு குழியில் 30 உடல்களும் புதைக்கப்பட்டிருந்தன.

இவர்கள் அனைவரும் ஐ.எஸ். தீவிரவாதிகளால் கைது செய்யப்பட்டு தண்டனை நிறைவேற்றப்பட்டவர்களாக இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. 2014ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி படவுஸ் சிறையில் 600 கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர். அவர்கள் இங்கு புதைக்கப்பட்டிருக்கலாம் என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

(ப)

## மேக்ரனின் மேக் - அப் செலவு ரூ.20 லட்சம்

பாரீஸ்.ஓக.28

பிரான்ஸ் அதிபரான இமானுவேல் மேக்ரன் பதவி ஏற்ற 3 மாதத்தில் தனது மேக்-அப் அதாவது ஒப்பனைக்காக 20 லட்சம் ரூபா வரை செலவு செய்துள்ளார்.



பிரான்ஸ் அதிபராக இமானுவேல் மேக்ரன் பதவி வகிக்கிறார். கடந்த 3 மாதங்களுக்கு முன்பு நடந்த தேர்தலில் அமோக வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தார்.

இவர் அதிபராக பதவி ஏற்ற 3 மாதத்தில் தனது மேக்-அப் அதாவது ஒப்பனைக்காக 20 லட்சம் ரூபா வரை செலவு செய்துள்ளார். இதை அதிபர் அலுவலகம் உறுதி செய்துள்ளது.

இது பிரான்ஸில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அதிபர் மேக்ரன் மிகக் குறைந்த செலவில் மேக்-அப் செய்து கொள்ள வேண்டும் என்றும், தற்காலிகமாக வாடகை அடிப்படையில் மேக்-அப் மேனை பயன்படுத்தி அதன் மூலம் செலவை குறைக்கலாம் என்றும் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இருந்த போதிலும் இவருக்கு முன்பு அதிபர் பதவி வகித்த பிரான்ஸ் கோயிஸ் ஹோலன்டேவை விட இவரது மேக்-அப் செலவு குறைவுதான் என்ற கருத்தும் நிலவுகிறது.

## அமெ. டெக்சாஸ் மாநிலத்தை தாக்கியது ஹார்வே புயல்!

நியூயோர்க்.ஓக.28

மணிக்கு 210 கிலோ மீற்றர் வேகத்தில் அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தை தாக்கிய 'ஹார்வே' புயலால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கடந்த 14 ஆண்டுகால வரலாறு காணாத பெரும் புயல் நேற்று முன்தினம் தாக்கியது.

இதனால் பெரிய மரங்கள் அடியோடு பெயர்ந்து சாய்ந்தன. கார்பஸ் கிறிஸ்டி நகர் உட்பட பல நகரங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதன் காரணமாக 2 லட்சத்து 11 ஆயிரம் வீடுகள் இருளில் மூழ்கின.

மணிக்கு சுமார் 210 கிலோ மீற்றர் வேகத்தில் சீறிவந்த இந்த பெரும் புயல் அரன்சாஸ் மற்றும் ஓகோன்னோர்துறைமுகங்களுக்கு இடையே டெக்சாஸ் மாநிலத்தின் தென்பகுதியைத் துவம்சம் செய்தது.




கடந்த 2004ஆம் ஆண்டு அமெரிக்காவைத் தாக்கிய சார்லி புயலுக்குப் பிறகு நேற்று முன்தினம் வீசிய இந்தப் புயல் தொடர்பாக ஏற்கனவே எச்சரிக்கை விடுக்கப் பட்டிருந்ததால் மக்கள் அனைவரும் வீடுகளுக்குள்ளே முடங்கிக் கிடந்தனர்.

இந்தப் புயலால் ஏற்பட்ட பாதிப்புத் தொடர்பான உடனடி செய்திகள் ஏதும் வெளியாகாத நிலையில் நான்காம் எச்சரிக்கை எண்ணுடன்டெக்சாஸ்மாநிலத்துக்குள் நுழைந்த ஹார்வே புயல் மூன்றாம் எச்சரிக்கை எண்ணுடன் வலுவிழந்ததாக வானிலை ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

## இலங்கையர்களுக்கான பொதுமன்னிப்புக் காலம் 10 திகதியுடன் நிறைவு!

தென்கொரியாவில் சட்டவிரோதமாக தங்கியுள்ள இலங்கையர்கள் வெளியேறுவதற் கான பொதுமன்னிப்புக் காலம் எதிர்வரும் 10 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணிமனை தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் பொதுமன்னிப்புக் காலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த காலப்பகுதிக்குள் தென்கொரியாவில் சட்டவிரோதமான முறையில் தங்கியுள்ள இலங்கையர்கள் நாடுதிரும்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த காலப்பகுதியில் நாடு திரும்பும் பணியாளர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## தாய்லாந்து முன்னாள் பிரதமர் வெளிநாட்டுக்குத் தப்பி ஓட்டம்!

பாங்கொக்.ஓக.28

ஊழல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட தாய்லாந்து முன்னாள் பெண் பிரதமர் யிங்லிக் ஷினாவத்ரா வெளிநாட்டுக்கு தப்பி ஓடியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

தாய்லாந்து முன்னாள் பெண் பிரதமர் யிங்லிக் ஷினாவத்ரா (வயது-50). இவர் பதவி வகித்த போது மானிய விலையில் விவசாயிகளுக்கு அரிசி வழங்கியதில் ஊழல் செய்ததாகக் குற்றம் சாட் டப்பட்டது.

எனவே, அவரை 2014ஆம் ஆண்டில் பதவியில் இருந்து இராணுவம் தூக்கி எறிந்தது. தற்போது அங்கு இராணுவ ஆட்சி நடக்கின்றது.



இதற்கிடையே அவர் மீது தாய்லாந்து நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது. விசாரணை முடிந்து தீர்ப்பளிக்கும் வேளை நெருங்கி விட்டது.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை அவர் வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. திடீரென அவர் தலைமறைவாகி விட்டார். எனவே நீதிமன்றத்திற்கு வெளியே அவரைக் காண காத்திருந்த ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

இதற்கிடையே இதே ஊழல் வழக்கில் தொடர்புடைய முன்னாள் வர்த்தக அமைச்சருக்கு 42ஆண்டுகள்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. எனவே, தனக்கும் சிறை தண்டனை விதிக்கப்படலாம் என்ற பயத்தால் அவர் வெளிநாட்டுக்கு தப்பி ஓடியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

# இறுதிச் சுற்றில் பி.வி. சிந்து



பெண்களுக்கான இரண்டாவது அரையிறுதி போட்டியில் இந்தியாவின் முன்னணி வீராங்கனை பி.வி. சிந்து, சீனாவின் சென் யூபே-வை எதிர்கொண்டு, 2:13, 21:10 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார்.

ஸ்கொட்லாந்தில் உள்ள கிளாஸ்கோ நகரில் பட்மிண்டன் உலக சம்பியன்ஷிப் தொடர் நடை பெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடை பெற்ற பெண் களுக்கான இரண்டாவது அரையிறுதி யில் 4ஆவது இடத்தில் இருக்கும் இந்தியாவின் முன்னணி வீராங்கனையான பி.வி. சிந்து, பத்தாவது இடத்தில் இருக் கும் சீனாவின் சென் யூபே இனை எதிர்கொண்டார்.

ஆட்டத்தின் தொடக்கத்தில் இருந்தே சிந்து அதிரடியாக ஆடினார். 21:13, 21:10 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார். இந்த போட்டியில் சிந்து சென் யூபே-வை 48 நிமிடத்தில் வெற்றி பெற்றார்.

இறுதி ஆட்டத்தில் சிந்து ஜப்பானின் நசோமி ஒகாராவைச் சந்திக்கிறார். இந்தப் போட்டியில் அவர் வெற்றி பெறாவிட்டாலும் வெள்ளி பதக்கம் கிடைப்பது உறுதியாகி உள்ளது. இது இவரது 3ஆவது பதக்கமாகும்.

ஏற்கனவே 2013 மற்றும் 2014இல் நடந்த உலக சம்பியன்ஷிப் போட்டியில் சிந்து வெண்கலப் பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 50 போட்டிகளில் தொடர் வெற்றி குத்துச்சண்டை வீரர் சாதனை

தொழில்முறைக் குத்துச் சண்டையில் தொடர்ந்து 50 போட்டி களில் தோல்வியைச் சந் திக்காமல் மேவெதர் உலக சாதனை படைத்துள் ளார்.

தொழில்முறை குத்துச் சண்டை ஜாம்பவான் களான புளோயிட் மேவெதர் (அமெரிக்கா) கனோர் மெக்கிரிகோர் (அயர்லாந்து) மோதிய குத்துச்சண்டை போட்டி அமெரிக்காவின் லாஸ்வே காஸ் நகரில் நடைபெற் றது.

பிரபலமான இரு வீரர் கள் மோதிய ஆட்டம் என்பதால் ரசிகர்கள் மத்தியில் மிகுந்த எதிர் பார்ப்பு ஏற்பட்டது. 12 சுற்றுக் கொண்ட போட்டி யில் இருவரும் ஆக்ரோஷ மாக மோதினர். மாறி மாறி சரமாரியாக குத்துக்களை விட்டனர். ஆனால், மேவெ தரின் சாமர்த்தியமான ஆட்டத்துக்கு மெக் கிரிகோர் ஈடுகொடுக்க முடியவில்லை. 10ஆவது சுற்றில் மெக்கிரி கோரை மேவெதர் 'டெக்னிக்கல் நொக் அவுட்' செய்து வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டது.

மேவெதர் இதுவரை தோல்வியே சந்திக்காத வீரராக வலம் வருகிறார். தான் மோதிய 50 போட்டி களிலும் வெற்றி பெற் றுள்ளார். இதில் 27 பேரை 'நொக் அவுட் 'செய்துள்ளார் என் பது குறிப்பிடத்தக்கது.




## வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த பிறிமியர் லீக் 20: 20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி – முதற்சுற்று ஆட்டங்கள்

# யூனியன் அணிக்கு பதற்றமில்லா வெற்றி



(கங்கா)

ரகுபதியின் அரைச்ச தம் கைகொடுக்க திரு நெல்வேலி வை.எம். எச்.ஏ அணியை 4 விக் கெட்டுகளால் வென்றது தெல்லிப்பழை யூனியன் அணி.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடை பெற்ற முதற்சுற்று ஆட்ட மொன்றில் திருநெல் வேலி வை.எம்.எச்.ஏ அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ அணி நிதானமாக ஓட்டங்களைச் சேகரித்தது. 20 ஓவர் களில் 9 விக்கெட்டுகளை இழந்து 120 ஓட்டங் களைப் பெற்றிருந்தது. சுதாகரன் ஆட்டமிழக் காமல் 29 ஓட்டங்களை யும், தேசிகன் 28 ஓட்டங் களையும் பெற்றுக்கொடுத் தனர்.

பந்துவீச்சில் யூனியன் அணி சார்பாக தயாளன் 3, சுஜந்தன், ரகுபதி ஆகி யோர் தலா 2 விக்கெட்டு களையும் கைப்பற்றினர்.

121 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்தா டிய யூனியன் அணி, ரகுபதியின் அரைச்சதத் தின் உதவியுடன் 17.5 ஓவர்களில் 6 விக்கெட்டு களை இழந்து வெற்றி யிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் ரகுபதி 53 ஓட்டங்கள், சுஜந்தன் 28 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சுதர்சன் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

# வெற்றியை தனதாக்கியது ஸ்ரான்லி அணி

(கங்கா)

குறைந்தளவு ஓட்டங்களை பெற் றாலும், அது தொடர்பில் சோர்ந்து விடா மல் ஸ்ரீகாமாட்சி அணியை பந்துவீச் சால் நிலைகுலைய வைத்து, பதற்றமில் லாத வெற்றியை பெற்றது ஸ்ரான்லி அணி.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடை பெற்ற முதற்சுற்று ஆட்டமொன்றில் ஸ்ரான்லி அணியை எதிர்த்து ஸ்ரீகா மாட்சி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற ஸ்ரான்லி அணி முதலில் துடுப்பெடுத் தாடக் களமிறங்கியது. 19.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் டிலுக்ஷன் 25, தர் சன் 15 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரீகாமாட்சி அணி சார்பாக, சதீஸ், சுதர்சன் தலா 3 விக் கெட்டுகளையும், மோகன்ராஜ் 2 விக் கெட்டுகளையும் கைப்பற்றினர்.

112 ஓட்டங்களை வெற்றியிலக் காகக்கொண்டு பதிலுக்குத் துடுப் பெடுத்தாடக் களமிறங்கிய ஸ்ரீகாமாட்சி அணி, ஸ்ரான்லி அணியின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து, முடிவில் 16.2 ஓவர்களில் 65 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இரண்டு இலக்க ஓட்ட எண்ணிக்கையாக அரவிந்தன் மாத்திரம் 10 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் ஸ்ரான்லி அணி சார் பாக கண்ணன் 3, கம்சிகன் மற்றும் நிரு சன் ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

# 42 ஓட்டங்களால் அரியாலை அணி வெற்றி

(கங்கா)

நிரோசனின் பொறுப் பான அரைச்சதத்தின் உதவியுடன் அரியாலை அணி 42 ஓட்டங்களால் விக்டோரியன்ஸ் அணியை வென்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் அண்மை யில் நடைபெற்ற முதற் சுற்று ஆட்டமொன்றில் சுழிபுரம் விக்டோரியன்ஸ் அணியை எதிர்த்து அரி யாலை மத்தி அணி மோதி யது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப் பெடுத்தாடிய அரியாலை மத்தி அணி, நிரோசன னின் அரைச்சதத்தின்



உதவியுடன் 20 ஓவர் களில் 9 விக்கெட்டுகளை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத் தில் நிரோசன் 52, பிரி யன் 15 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் விக் டோரியன்ஸ் அணி சார் பாக, பிரசாத், கஜேந்திரன் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

163 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்தா டிய விக்டோரியன்ஸ் அணி, வெற்றியை நோக்கி போராடாமல் சரணடைந்தது. 20 ஓவர்களில் 7 விக்கெட்டு களை இழந்து 121 ஓட் டங்களை மாத்திரம் பெற் றுக்கொண்டது. துடுப் பாட்டத்தில் ஜோஜல் 45 ஓட்டங்களைப் பெற் றுக்கொண்டார்.

பந்துவீச்சில் அரி யாலை அணி சார்பாக, பிரியன், டிசான், ஜனன் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

# ஹாட்லியன்ஸ் 6 ஓட்டங்களால் வெற்றி

(கங்கா)

பந்துவீச்சாளர்களின் கட்டுக்கோப் பான பந்துவீச்சால் அதிரடியாக ஆடிய ஸ்கந்தா ஸ்ரார்ஸ் அணியைக் கட்டுப் படுத்தி 6 ஓட்டங்களால் வெற்றியைத் தனதாக்கியது ஹாட்லியன்ஸ் அணி.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற முதற் சுற்று ஆட்டமொன்றில் ஹாட்லியன்ஸ் அணியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார்ஸ் அணி மோதியது. நேரம் போதாமையால் போட்டி 16 ஓவர்களைக் கொண்டதாக நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்று முத லில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லியன்ஸ் அணி, 16 ஓவர்களில் 7 விக்கெட்டு களை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் மணிமாறன் 26 ஓட்டங்களையும், புருசோத்தமன் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும், ராஜ்குமார் 23 ஓட்டங்களையும் பெற் றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்கந்தா ஸ்ரார்ஸ் அணி சார்பாக, துபிசன், சோபிகன் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

143 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய ஸ்கந்தா ஸ்ரார்ஸ் அணி, தொடக் கத்தில் மெதுவாக ஆடியது. எனினும் மத்திய தரவரிசை வீரர்களின் அதிரடி யால் வெற்றியிலக்கை நோக்கி வேகமாக நகர்ந்தது. துவாரகன் தனியாளாக நின்று அடித்தாடி 50 ஓட்டங்களைப் பெற்றார். எனினும் அவர் ஆட்டமிழக்க, ஸ்கந்தா அணியினால் வெற்றியை நோக்கி தொடர்ந்து செல்ல முடியாமல், 6 ஓட்டங் களால் தோல்வியடைந்தது. 16 ஓவர் கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 136 ஓட்டங்களை மாத்திரம் அவ்வணி பெற்றது. துடுப்பாட்டத்தில் துவாரகன் 50 ஓட்டங்களையும், அகிந்தன் 25 ஓட்டங்களையும், மிது 24 ஓட்டங்களை யும் பெற்றுக்கொடுத்தனர்.

ஹாட்லியன்ஸ் அணி சார்பாக பந்துவீச்சில் பிரதீஸன் 2 விக்கெட்டு களைக் கைப்பற்றினார்.

# மீண்டும் மண்கவ்வியது இலங்கை; ஒரு நாள் தொடரும் இந்தியாவுக்கு!

## சவாலுக்கு முகம்கொடுக்க நான் தயாராக உள்ளேன் - கபுகெதர



அனைத்து வீரர்களும் ஓர் அணியாக ஒன்றி ணைந்திருக்கும் நிலையில் அணியை வெற்றி பெறச் செய்து எமது திறமையை நிரூபிப் போம் என்று இலங்கை அணியின் தலைமை பொறுப்பை ஏற்றிருக்கும் சாமர கப்பு கெதர தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிராக பல்லே கலையில் நடந்த இரண்டாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி தோல்வியைச் சந்தித்தபோதும் இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு கடும் நெருக்கடி கொடுக்க முடிந் தது. குறிப்பாக அகில தனஞ்சய இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசையை சாய்த்து அடுத் தடுத்து ஆறு விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

கடந்த போட்டியில் நாம் விளையாடிய முறை மற்றும் எமது போராட்டம் காரணமாக அணியினர் உற்சாகத்துடன் உள்ளனர். ஓர் அணியாக வீரர்கள் ஒன்றிணைந்து உள்ளனர் என்று கபு கெதர குறிப்பிட்டார்.

இந்தக் கருத்தை நேற்றைய ஆட்டத்துக்கு முன்னர் அவர் தெரிவித்திருந்தார்.

இரண்டாவது ஒருநாள் போட்டியில் குறித்த நேரத்தில் ஓவர்களை வீசி முடிக்கத் தவறிய இலங்கை அணித் தலைவர் உபுல் தரங்கவுக்கு ஐ.சி.சி இரண்டு போட்டிகளில் தடை விதித்துள்ளது. இதனால் உப தலைவர் சாமர கப்புகெதர இலங்கை அணித் தலைமை பொறுப்பை ஏற்றுள்ளார்.

இதுவரை 100 ஒருநாள் போட்டிகளில் விளையாடி இருக்கும் கப்புகெதர இதற்கு முன் இலங்கை அணிக்கு தலைமைப் பொறுப்பை வகித்தவரில்லை. எனினும், கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை ஒருநாள் தலைவராகச் செயற்படவிருக் கும் நான்காவது வீரர் கப்புகெதர ஆவார்.

கண்டி, ஓக. 28

ஏற்கனவே மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரில் இலங்கைக்கு வெள்ளையடித்து வெற்றி வாகை சூடிய இந்தியா -

நேற்று மூன்றாவது ஒரு நாள் ஆட்டத்திலும் ஆறு விக் கெட்டுக்களினால் தொடர் வெற்றியீட்டி ஐந்து ஒரு நாள் ஆட்டங்கள் கொண்ட இந்தத் தொடரையும் 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

மூன்றாவது ஒருநாள் ஆட்டம் நேற்று கண்டியில் பகல் - இரவு மோதலாக நடந்தது.

நேற்றைய ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய இலங்கை அணித் தலைவர் கபுகெதர துடுப்பாடத் தீர்மானித்தார்.

இலங்கைதரப்பில்திரிமன்ன மாத்திரமே சோபித்தார். அவர் 80 ஓட்டங்களைப் பெற்றார். சண்டிமல் 36, ஸ்ரீவர்த்தன 29 ஓட்டங்களைப் பெற்றனர்.

வழங்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 217 ஓட்டங்களையே இலங்கை அணியால் பெற முடிந்தது.

இந்தியா தரப்பில் பும்ரா 27 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய இந்திய அணி 45.1 ஓவர்களில் 4 விக்கெட் இழப் புக்கு 218 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

இந்திய அணியின் ஆரம்ப ஆட்டம் மிகவும் சொதப்பலாகவே இருந்தது.

ஆரம்பத்தில் - 15 ஆவது ஓவரின் தொடக்கத்தில் - இந் தியா 4 விக்கெட்டுக்களை இழந்து ஆக 61 ஓட்டங்களையே பெற்றுத் தடுமாறியது.

ஆனால் ஆரம்பத் துடுப் பாட்ட வீரர் ரோஹித் சர்மாவும், டோனியும் நிதானமாகவும் பொறுப்பாகவும் துடுப்பெடுத் தாடி இந்தியாவின் வெற்றியை உறுதிப்படுத்தினர்.

ரோஹித் சர்மா ஆட்டமிழக் காமல் 124 ஓட்டங்களையும், டோனி ஆட்டமிழக்காமல் 67 ஓட் டங்களையும் பெற்றனர். (உ)

## அணித் தலைவர் பொறுப்பிலிருந்து விலகுகின்றார் டி வில்லியர்ஸ்



தென் ஆபிரிக்க கிரிக்கெட் அணியின் தலைவர் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்வதாக ஏ.பி.டி. வில்லியர்ஸ் அறிவித்துள்ளார்.

ஏபி டி வில்லியர்ஸ் 2012 ஆம் ஆண்டிலிருந்து தென் ஆபிரிக்க சர்வதேச ஒருநாள் மற்றும் சர்வதேச இருபதுக்கு 20 அணித்தலைவர் பொறுப்பை வகித்துள்ளார்.

கடந்த வருடம் டெஸ்ட் அணியின் தலைவராகவும் நியமிக்கப்பட்ட அவருக்கு தோற்பட்டையில் உபாதை ஏற்பட்டதால் முக்கிய பல தொடர்களை இழந்தார்.

இதனால் தற்காலிக அணித்தலைவராக பெப் டு பிலெசிஸ் நியமிக்கப்பட்டார். அவர் அணியைச் சிறப்பாக வழிநடத்தி பல வெற்றிகளை ஈட்டிக்கொடுத்துள்ளார்.

இந்த நிலையில், சர்வதேச ஒருநாள் அணித் தலைவர் பொறுப்பிலிருந்து தாம் விலகிக்கொள்கிறார் என ஏ.பி.டி.வில்லியர்ஸ் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், புதிய தலைவருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கத் தாம் தயாராக இருக்கிறார் எனவும் வில்லியர்ஸ் கூறியுள்ளார்.

அவர் தலைமையில் 103 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் தென் ஆபிரிக்கா விளையாடியுள்ளதுடன், 59 வெற்றிகளையும், 39 தோல்விகளையும் சந்தித்துள்ளது.

## நெய்மரின் இடத்தை நிரப்பும் ஒஸ்மானே டேம்பல்லே




நெய்மர் பார்சிலோனா கழகத்தை விட்டு விலகியமை அக்கழகத்தின் முன்களத்திலே பெரியதொருஇடைவெளியைஏற்படுத்தியுள்ளது. இதற்குச் சான்றாக இறுதியாக பார்சிலோனா அணி கலந்துகொண்ட போட்டிகளின் முடிவுகள் போதுமானவையாகும். இதனால் ஆதரவாளர்கள் அவ்வணியின் நிர்வாகத் தலைவரான ஸ்பெய்ன் நாட்டைச்சேர்ந்த ஜோசப் மெரியா பார்தோமியுடன் சற்று கோபத்துடனே காணப்படுகின்றனர்.

நெய்மரின் இடைவெளியை நிரப்புவதற்காக பார்சிலோனா நிர்வாகம் பிரபல இளம் வீரர்கள் பலரை தமக்காக கையொப்பமிட முயற்சிக் கத் தவறவில்லை. அவர்களுள் இத்தாலி வீரரும், பரிஸ் செயின்ட் ஜெர்மைன் கழகத் தின் மத்திய கள வீரருமான மார்கோ வேராட்டி, லிவர்பூல் மற்றும் பிரேசில் நாட் டின் மத்தியகள வீரரான பீலிப் கடீனியோ மற்றும் பீவீபீ டோர்ட்மண்ட் அணியினதும், பிரான்ஸ் தேசிய அணியினதும் முன்கள வீரர் ஒஸ்மானே டேம் பல்லே ஆகியோர் முக்கியமான வர்கள்.

இவர்களில் 20 வயதான பிரான்ஸ் நாட்டு வீரர் டேம்பல்லேவை பார்சிலோனா அணி 105 மில்லியன் யூரோக்களுக்கு பீ.வீ.பீ. டோர்ட்மண்ட் அணியிடமிருந்து ஒப்பந்தமிடவிருப்பதாக அவ்வணியின் வலைத்தளத்தில் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

1997ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி பிறந்த டேம்பல்லே கடந்த பருவகாலம்(2016/17) முதல் டோர்ட்மண்ட் அணிக்காக விளையாட கையொப்பமிட்டார். இதற்கு முன்னர் பிரான்ஸ் கழகமான ஸ்டெட் ரெனாய்ஸ் கால்பந்துக் கழகத் திற்காக அவர் விளையாடினார். கடந்த ஒரு பருவ காலத்தில் பார்சிலோனா அணி நிர்வாகத்தின் கவனத்தை மட்டுமன்றி, பிரான்ஸ் கால்பந்து ஒன்றியத்தின் கவனத்தையும் ஈர்த்த ஒரு வீரராக இவர் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பார்சிலோனா கால்பந்துக் கழகத்தில் பிரகாசித்து வந்த பிரேசில் வீரர் நெய்மர் அக்கழகத்தி லிருந்து விலகியமையைத் தொடர்ந்து அவ்வணியின் முன்களத்தின் வேகம் குறைந்திருப்பதை காணக்கூடியதாக உள்ளது. இவ்வெற்றிடத்தை நிரப்ப பீ.வீ.பீ. டோர்ட்மண்ட் அணிக்காக விளையாடிய பிரான்ஸ் தேசிய அணியின் முன்கள வீரரான 20 வயதுடைய ஒஸ்மானே டேம்பல் லேவை பார்சிலோனா தன்னோடு இணைக்கவுள்ளதாக உத்தியோகபூர்வமாகத் தெரிவித்துள்ளது.

ஸ்பெய்ன் நாட்டின் பிரபல்யம் வாய்ந்த கழ கங்களில் ஒன்றான பார்சிலோனாவின் முக்கிய வீரர்களுல் ஒருவரான நட்சத்திர வீரர் நெய்மர் 2017/18 ஆம் பருவகாலம் முதல் ஜேர்மன் நாட் டின் மிகப் பிரபல்யம் வாய்ந்த பரிஸ் செயின்ட் ஜெர்மைன் கழகத்துடன் 222 மில்லியன் யூரோக் களுக்கு ஒப்பந்தம் செய்தார். இந்த ஒப்பந்தத்தின் மூலம் உலகிலே மிகப் பெறுமதியான வீரர் என்ற பட்டத்தையும் நெய்மர் தனதாக்கிக்கொண்டார்.

## ஆசிய ஆணழகனாக முடிசூடிய லூசன் புஷ்பராஜ்





சுமார் 50 வருட வரலாற்றைக் கொண்ட ஆசிய ஆணழகன் போட்டித் தொடரில் இலங் கைக்கு முதலாவது சம்பியன் பட்டத்தை வென்று கொடுத்து 2017ஆம் ஆண்டின் ஆசியா வின் சிறந்த ஆணழகனாக இலங் கையைச் சேர்ந்த லூசன் அன் ரன் புஷ்பராஜ் நேற்று மகுடம் சூடினார்.

ஆசிய ஆணழகன் மற்றும் உடற்தகுதி விளையாட்டு சம் மேளனத்தினால் நடத்தப்படு கின்ற 51ஆவது ஆசிய ஆணழ கன் போட்டிகள் (Asian Body Building Physique Sports Championship - 2017) கடந்த 20ஆம் திகதி தென்கொரியாவின் தலைநகர் சோலில் ஆரம்ப மானது. இதில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆண் களுக்கான 100 கிலோகிராமுக்கு அதிகமானடைப்பிரிவில் கலந்து கொண்ட லூசன் புஷ்பராஜ், முத லிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

சுமார் 26 நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் கலந்துகொண்ட இம்முறை போட்டித் தொடரில், 2ஆவது இடத்தை உஸ்பெகிஸ் தான் வீரரும், 3ஆவது இடத்தை தென்கொரிய வீரரும் பெற்றுக் கொண்டனர்.

**எதிரித்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் குமார் இரட்ணம் மன்றில் தெரிவித்திருந்தார்.

அதனை அடுத்து, எதிரித் தரப்பு சாட்சியப் பதிவு இன்று ஆரம்பமாகின்றது. தொடர்ந்து இம் மாதம் 29,30,31 ஆம் திகதிகளிலும், செப்ரெம்பர் மாதம் 4, 11, 12, 13, 14, 15 ஆம் திகதிகளிலும் எதிரித் தரப்பு சாட்சியங்களைப் பதிவு செய்வதற்கு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

**சிறைச்சாலை...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுராதபுரம்சிறைச்சாலைக்கு சொந்தமானபேருந்தே இவ்வாறு திடீரென புரண்டு விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் குறித்துதெய்யத்தகண்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**ஏழு....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரத்து செய்யப்பட்டால் அவர்களின்நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும், 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு அமைய இரத்துச்செய்யப்படும் என்றும் கூறப்பட்டது.

பிரசன்ன ரணதுங்க, சனத் நிஜுந்த, பவித்ரா வன்னியாராய்ச்சி, ரோஹித அபேகுணவர்தன, திலும் அமுனுகம, லோஹான் ரத்வத்த மற்றும் பிரசன்ன ரணவீர ஆகியோரே இவ்வாறு கட்சி உறுப்புரிமையில் இருந்து நீக்கப்படவுள்ளனர் என சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**ரெலோவின்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிய தகவலை அக்கட்சியின் செயலாளர் நாயகம் என்.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

"அமைப்புக் குழுவில் மொத்தம் 21பேர். அதில் டெனீஸ்வரன் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். ஆகையால் அவரைத் தவிர எஞ்சிய 20 பேருக்கும் அழைப்புச் செய்தி அனுப்பட்டுள்ளது." – என்று அவர் கூறினார்.

வடக்கு மாகாண சபைக்கான அமைச்சர் பதவிக்கு ரெலோ அமைப்புக்குழு தனது கட்சியின் சார்பில் விந்தனைப் பரிந்துரைத்தது. ஆனால் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனோ அதனை உதாசீனப்படுத்தி விட்டு மற்றொரு ரெலோ உறுப்பினரான வைத்தியர் குணசீலனை சுகாதார அமைச்சராகநியமித்தார். அவரும் பதவி யேற்றுக் கொண்டார்.

கட்சி முடிவை மீறி குணசீலன் அமைச்சுப் பதவி ஏற்றமையை கட்சியின் பொதுச் செயலாளர் என்.ஸ்ரீகாந்தா கடுமையாகச் சாடியிருந்தார்.

"அரசியல்கட்டாக்காலிகளுக்கு ரெலோவில்இடமில்லை"–என்றும் கூட அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், வடக்கு மாகாண சபையில் ரெலோ சார்பான அமைச்சு மீண்டும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவருக்கே கிடைத்தமை தமக்கு மகிழ்ச்சியே எனக் குறிப்பிட்டு ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. அதனைவரவேற்றிருந்தார்.

இப்படிகுணசீலனின் அமைச்சுப் பொறுப்பேற்புத் தொடர்பாக கட்சியின் இரண்டு உயர்மட்டத் தலைவர்கள் மத்தியிலேயே எதிர்ப்பும் – வரவேற்பும் என முரண்பட்ட நிலைமை காணப்படுவதால் இந்த விவ காரம் 16 ஆம் திகதி கூட்டத்தில் ஓங்கி ஒலிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ)

**இலங்கையின்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதுஅனைத்துலகசமூகத்தை ஏமாற்றமடையச் செய்துள்ளது

''கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் காணாமல்போனோருக்கான பணியகச் சட்டம் நிறைவேற்றப்பட்ட போது. நான்நம்பிக்கையுடன் இருந்தேன். ஆனால் அதிலும் இன்னமும் எந்த முன்னேற்றமும் இல்லை.

''இதன் தொடர்ச்சியாக உண்மைகண்டறியும்ஆணைக்குழு நிறுவப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது வெறும் வரைவு நிலையிலேயே இருக்கிறது. – என்றும் அவர் கூறியுள்ளார். (உ)

**பருத்தித்துறை...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினரின்கட்டுப்பாட்டில் கடந்த 27 வருட காலமாக இருந்த மயிலிட்டித்துறை முகம் கடந்த மாதம் மக்கள் பாவனைக்கு இராணுவத்தினரால் விடப்பட்டது.

அந்நிலையில்பருத்தித்துறை – பொன்னாலை வீதியில் சுமார் இரண்டரைக் கிலோ மீற்றர் தூரம் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருப்பதனால் மயிலிட்டிப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து பருத்தித்துறை பகுதியில் வசிக்கும் மக்கள் சுமார் 42 கிலோ மீற்றர் தூரத்தை சுற்றியே வர வேண்டியிருந்தது.

அதனால் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் இரண்டரைக் கிலோமீற்றர் தூர வீதியை மக்கள் பாவனைக்கு அனுமதிக்குமாறு இராணுவத் தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

அந்த நிலையில் தற்போது இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகளில் இராணுவப் பாதுகாப்புடன் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள இரண்டரைக் கிலோமீற்றர் தூரத்திற்கு மக்கள் பயணிக்க இராணுவத் தரப்பு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் –

அது தொடர்பில் மேலதிகமாக ஆராய்வதற்கு இராணுவத் தரப்பினருடன் நாளை செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட செய லகத்தில் கலந்துரையாடப் படவிருப்பதாகவும் –

யாழ். மாவட்ட செயலாளர் நாகலிங்கம் வேதநாயகன் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

**புலமைப்பரிசில்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடப்படும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் 20 ஆம் திகதி தரம் 5 இற்கான புலமைப் பரிசில் பரீட்சை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

**இலங்கை...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பல்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் இலங்கை, இந்தியா கடற்பரப்பில் நடைபெறும் கடத்தல் உள்ளிட்ட குற்றச் செயல்களை ஒரு வருடத்திற்குள் தடுத்து நிறுத்த முடியும்.

எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் ஒரு கப்பலையும், அடுத்த ஆண்டு மூன்று கப்பல்களையும் இந்தியா இலங்கைக்கு வழங்க உள்ளது என வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா தெரிவித்தார் என அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை தடுக்க கடல் எல்லைத் திட்டங்களைத்தாம் மாற்றியுள்ளார் எனவும் அவர் கூறினார் என அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (ம)

# வட, கிழக்கில் மூடப்பட்ட தொழிற்சாலைகள் மிக விரைவில் மீள இயங்க வைக்கப்படும்

## அதன்மூலம் வேலைவாய்ப்பு அதிகரிக்கும் என்கிறார் ரிஷாட்



மன்னார், ஓக.28

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் புதிய தொழிற்சாலைகளை அமைத்து ஐயாயிரம் இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புக்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மேலும், வடக்கு – கிழக்கு பகுதிகளில் இயங்காதநிலையில் உள்ள தொழிற்சாலைகளை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

மன்னார் மாந்தையில் சோல்ட் லிமிட்டட் கூட்டுத்தாபனத்தின் அலுவலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டிய பின்னர் அங்குள்ள உல்லாச விடுதி ஒன்றைத் திறந்துவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்–

மாந்தையில் உப்பளப் பிரச்சினை ஏற்பட்டபோது நான் மன்னார் முன்னாள் பிரதேச செயலாளராகவும் தற்போது மேலதிக அரச அதிபராகவும் இருக்கின்றதிருமதிஸ்ரான்லிமெல்லை அனுகியதன் மூலம் அப்பிரச்சினை தீர்க்கப்பட்டது.

தற்போது ஆனைவிழுந்தான் உப்பளமும் அவர்களால் பொறுப்பேற்கப்பட்டது. தற்போது இந்த இரு உப்பளங்களும் தரமான உப்பை உற்பத்தி செய்து இலாப மீட்டி வருகின்றன. எதிர்காலத்திலும் தொழிலாளர்களின் வருமானத்தை பெருக்குவதற்கு நாம் பல திட்டங்களை முன்னெடுக்க விருக்கிறோம்.

மன்னார் பல வளங்களைக் கொண்ட மாவட்டம். உப்பளத்தைத் தவிர வேறு தொழிற்சாலையற்ற மாவட்டமாக இது இருக்கின்றது. எனினும், கடந்த 3 வருடங்களுக்கு முன்பு மன்னார் இரண்டாம் கட்டையில் ஒருபுடவைத்தொழிற்சாலையை பல சிரமத்தின் மத்தியில் நாம் ஆரம்பித்தோம். அங்கு ஆயிரம் பேர் வேலை செய்கின்றனர்.

மேலும், மாந்தை மற்றும் மடு பிரதேசங்களை மையப்படுத்தி 2000 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்குடனும், சிலாபத்துறை, முசலி பிரதேசங்களை மையப்படுத்தி 1000 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும்நோக்குடனும்தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றோம்.

இவ்வாறே, நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 2000 பேருக்கு தொழில் வாய்ப்பைவழங்கும்நோக்குடன் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வனஜீவராசிகள் திணைக்களத்தினால் நாம் பல பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றோம். இதனால் எமது அபிவிருத்தி முயற்சிகளுக்குத் தடங்கல் ஏற்படுகின்றது. எனினும், அவற்றை வெற்றிகொள்வோம்.

எமது முயற்சிகளுக்கு ஒரு அடைவு மட்டத்தை எட்டியிருக்கின்றோம். கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் ஒரு தொழிற்சாலை கூட இல்லாதிருந்த மாந்தையில் நாம் தற்போது பல மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றோம்.

இதேபோல், மன்னார் உப்பளம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை, ஒட்டுச்சுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை மற்றும் கிழக்கு மாகா ணத்தில் மூடப்பட்டுள்ள காகிதத் தொழிற்சாலை ஆகிய வற்றை வெளிநாட்டு உதவிகளுடனும் எமது கல்விமான்கள் மற்றும் செல்வந்தர்களின் உதவியுடனும் மீள ஆரம்பிக்க தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றோம்.

திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளையும் உள்வாங்கி, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அவர்களின் வாழ்வைக் கட்டியெழுப்பப் பாடுபடுகின்றோம். – என்றார்.

(ம-112)

**பேருந்து...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த 53 வயது மதிக்கத்தக்க எஸ்.கிருபாகரன் என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே படுகாயமடைந்தார்.

உழவியந்திரத்தில் வந்து அவரை வெட்டிய நபர் அந்த இடத்தில் நிற்காமல் தப்பிச் சென்றார் எனவும் அங்கு நின்றவர்களே அவரை மீட்டு சிகிச்சைக்காககிளிநொச்சிவைத்தியசாலையில் சேர்த்தனர் எனவும் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

**ஜி.எஸ்.பி...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருக்கும் இவர்கள், இலங்கையினால்முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து ஆராய்வார்கள் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

இவர்களின் ஆய்வு அறிக்கை பின்னர் 27 ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் ஒன்று கூடலில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, இந்தப் புதிய திட்டத்திற்கு அமைய, இரு நூற்று அறுபது கோடி யூரோக்களை ஐரோப்பிய ஒன்றியம் சலுகை அடிப்படையில் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கு முன்னதாக இவ்விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியம் விதித்தநிபந்தனைகளை இலங்கை நிறைவேற்றி, பூர்த்திசெய்துள்ளதா என்பதைஇக்குழுவினர்ஆராய்வர் எனத் தெரி விக்கப்பட்டது. (உ)

**போலிக்..**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கின்றது ஜே.வி.பி.

அக்கட்சியின் தலைவர் அனுர குமார திஸநாயக்கா இந்தக் கோரிக்கையை நேற்றுக் கொழும்பில் முன்வைத்தார்.

பொதுமக்களின் விருப்பம் வெளிப்படத்தக்க வகையில் நேர்மையான தேர்தல்களை – மேலும் காலம் தாமதப்படுத்தாமல் – நடத்துமாறு அவர் கோரினார். (உ)

**பெங்களூரு...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை.

கொழும்பிலிருந்து புறப்பட்ட பிரதமர் ரணில் நேற்றுக் காலை பெங்களூருவைச் சென்றடைந்தார். அங்கிருந்து உடுப்பிக்கு முறபகல் 11 மணிக்கு ஹெலிக் கொப்டரில் அவர் பயணிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பெங்களூரு நகரில் நிலவிய மோசமான வானிலை காரணமாக ஹெலிகொப்டர் புறப்பட முடியவில்லை. அதனால் நண்பகல் 12 மணியளவில் மூகாம்பிகை கோயிலுக்கான அவரது பயணம் ரத்துச்செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை வரவேற்பதற்காக உடுப்பியில்ஹெலிக்கொப்டர்தளத்தில் காத்திருந்த உடுப்பிநகரதுணைக் கமிஷனர் பிரியங்கா அமரி பிரான்ஸிஸ் இலங்கைப் பிரதமரின் வருகை இரத்தாகியுள்ளது என அறிவித்தார். (உ)

**எதிர்கால...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறினார்.அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –


இன்றுநாட்டின்சொத்துக்கள் விற்கப்படுகின்றன. விற்கப்படும் சொத்துக்களை மீட்டெடுக்கும் போது இலங்கையில் நான்கு தலைமுறைகளை கடந்து விடும். அம்பாந்தோட்டைதுறைமுகமானது 99 ஆண்டுகளுக்குச் சீனாவிடம் குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று மத்தள விமான நிலையத்தையும் இந்தியாவிடம் வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே, நாட்டின் இந்த நிலையில் எதிர்காலச் சந்ததியினர் ஆயுதம் ஏந்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள். – என்றார். (ம)

# நம் மாணவ சமூகத்தை நடுத் தெருவுக்கு கொண்டு வருகின்ற நமது கல்வி முறைமை!

## வேதனைப்படுகின்றார் முதலமைச்சர் விக்னேஸ்வரன்



''இலங்கையின் கல்வி முறைமை மாணவ மாணவியரை நடுத்தெருவிற்குக் கொண்டு செல்கின்றன. இந்த முறைமையால் அரசின் பொருளாதார மேம்படுத்தல் கொள்கைகளும் வெற்றி பெறாமல் போகின்றன.''

– இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழில்.உள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று நடைபெற்ற புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அந்த நிகழ்வில் முதலமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடமாகாண சபையில் அமைச்சுப் பதவிகள் யாவும் மறுசீரமைக்கப்பட்டு ஒவ்வோர் அமைச்சின் கீழும் இயங்குகின்ற திணைக்களங்கள் வினைத்திறன் மிக்க சேவைகளை ஆற்றக்கூடிய வகையில் உரிய அறிவுறுத்தல்கள், தொடர் கூட்டங்கள் எனப் பல்வேறுபட்ட வேலைச் சுமைகளில் ஈடுபட்டிருந்தேன்.

இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட கல்விக் கொள்கை மாற்றங்கள் எத்தனையோ திறமை மிக்க மாணவர்கள் சர்வதேச தரத்தில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதற்குத் தடையாக அமைந்தது எனலாம்.

தாய் மொழிக்கல்வி மிகவும் சிறப்பானது. ஆனால், உயர் கல்வி அல்லது சர்வதேச தரத்திலான சட்டம் உள்ளடங்கலான கல்வியறிவைப் பெற்றுக் கொள்வதற்கு ஆங்கில மொழி அத்தியாவசியமாயிற்று. அப்பொழுது புறக்கணிக்கப்பட்ட ஆங்கிலக் கல்வி மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வரப்படவில்லை.

முதன் முதலாக சட்டத்தைத் தமிழில் கற்பிக்க என்னை 1971ஆம் ஆண்டில் அழைத்த போது தென்னிந்தியாவில் கூட சட்டம் தமிழில் படிப்பிக்கப்படவில்லை. உலகில் எங்கனுமே இல்லாத ஒரு கல்வி முறையை நாம் இங்கு புகுத்தினோம்.

ஆனால், சட்ட நூல்கள் தமிழில் இல்லாதமையால் என்னுடைய விரிவுரைகள் மட்டுமே மாணவ மாணவியருக்குப் பயன்பட்டது. போதிய ஆங்கில அறிவு இருந்தவர்கள் உசாத்துணை நூல்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டனர்.

ஆரம்ப காலத்தில் அமெரிக்க திருச்சபைகள் மற்றும் தென் இந்திய திருச்சபைகள் கல்வி வழி சமயப் பரம்பல்களை மேற்கொண்ட போது மாணவர்களுக்கு சிறந்த கல்வியறிவு அமெரிக்காவில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் வரவழைக்கப்பட்ட ஆசிரியர்களால் வழங்கப்பட்டது. அக்காலத்தில் போதனையானது ஆங்கில மொழியிலேயே அமைந்திருந்தது. தமிழ் ஒரு பாடமாக மட்டும் இருந்தது.

தமிழ் மொழியில் கற்பிப்பு தொடங்கியதும் ஆங்கிலம் இரண்டாம் மொழியாக மாறியது. ஆனால், இரண்டாம் மொழியைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் குறைந்து காணப்பட்டனர். மாணவர்களும் அதில் நாட்டம் கொள்பவர்களாகத் தெரியவில்லை. இன்று எம்மிடையே உயர் கல்வி பெற்ற பலர் ஆங்கிலத்தைப் பிழையாக எழுதிப் பேச எத்தனிக்கையில் பரிதாபமாக இருக்கின்றது.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஏற்பட்ட தொடர் யுத்தங்களும், பெரிய அழிவுகளும் பல லட்சக் கணக்கான மக்களை ஐரோப்பிய நாடுகளை நோக்கி இடம் பெயரச் செய்தன. அவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் தமது தராதரத்திற்கு ஏற்ப பல்வேறு தொழில்களை அந்நாடுகளில் புரிகின்றார்கள். ஆனால் அவர்களின் பிள்ளைகள் ஆங்கில மொழிக்கல்வியில் கல்விபயின்று சிறப்பான பதவிகளில் அந்நாடுகளில் அமர்ந்திருப்பது மகிழ்வைத் தருகின்றது.

தாய் மொழிக்கல்வி மிகவும் சிறப்பானது. ஆனால், உயர் கல்வி அல்லது சர்வதேச தரத்திலான சட்டம் உள்ளடங்கலான கல்வியறிவைப் பெற்றுக் கொள்வதற்கு ஆங்கில மொழி அத்தியாவசியமாயிற்று. அப்பொழுது புறக்கணிக்கப்பட்ட ஆங்கிலக் கல்வி மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வரப்படவில்லை.

பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்ஸர்லாந்து போன்ற இடங்களில் அந்நாட்டு மொழிகளில் கல்வி பயின்று நல்ல நிலையில் திகழ்கின்றார்கள்.

இவ்வாறான சூழலில் இங்கிருக்கின்ற இளைஞர், யுவதிகளை உரியவாறு நெறிப்படுத்தி மொழியிலும் கல்வியிலும் வல்லவர்களாக ஆக்க வேண்டும் என மேலை நாடுகளில் வசிக்கின்ற எம்மவர்களில் சிலர் சிந்திக்கின்ற காரணத்தாலேயே இன்றைய இவ்வாறான நிகழ்வுகள் இங்கு நடைபெறுகின்றன.

இங்கிருக்கின்ற இளைஞர், யுவதிகளுக்கு வெளிநாடு செல்ல வேண்டும் என்ற அவாநிறைய இருக்கின்றது. ஆனால், பெரும்பான்மையானவர்களுக்கு அது உயர் கல்விக்காக அல்ல. மாறாக பொருள் ஈட்டங்களைத் தேடிக்கொள்வதற்கும் சுகமான வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொள்வதற்குமேயாகும்.

வெளிநாடுகளில் வசிக்கின்ற எமது உறவுகளின் இரண்டாம், மூன்றாம் தலைமுறைகள் எவ்வாறு இருக்கப் போகிறார்கள், என்ன மொழியைப் பேசப்போகின்றார்கள் என்பது பற்றி எமக்கு ஓரளவு உய்த்துணர முடியும். பலர் தமது தாய் மொழியை மறவாது தமது இளைய தலைமுறையினருக்குப் புகட்டி வருகின்றார்கள்.

ஆகவே இங்கிருக்கும் இளைஞர், யுவதிகள் கற்றறிந்தவர்களாக- கல்வியில் மேம்பட்டவர்களாக - உலக தரத்தில் பேசப்படுபவர்களாக - மாற வேண்டுமாயின் அவர்கள் முறையாக வழிகாட்டப்பட வேண்டும்.

இன்று எமது இளைஞர், யுவதிகள் பல்வேறு திறமைகளை உள்ளடக்கியவர்களாக இருப்பினும் அவற்றை வெளிப்படுத்துவதற்கான உரிய களமொன்று அமைக்கப்படாமையால் முறையான வழிகாட்டல்கள் இன்றி அவர்களில் பலர் குற்றச் செயல்களில் ஈடுபடத் துணிந்துள்ளார்கள்.

அதீத திறமையுடையவர்கள் தொடர்ச்சியாக ஏதாவது கடமைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். ஓய்வில் இருப்பதென்பது அவர்களுக்கு விருப்பமற்ற ஒரு செயல். அவ்வாறானவர்கள் கவனிப்புக்கள் இன்றி விடப்படும் போது குற்றச்செயல்களில் அவர்களின் நாட்டம் தாவுகின்றது.

இலங்கையில் காணப்படுகின்ற பட்டப்படிப்புக்களில் பெரும்பாலானவை சான்றிதழ் கற்கை நெறிகளாகவே காணப்படுகின்றன. அவர்களது கற்கை நெறிகள் முடிவடைந்ததும் அடுத்து என்ன செய்வது என்பது பற்றி முறையான திட்டங்கள் எதுவும் அவர்களுக்கு இல்லை.

பல்கலைக்கழகங்களும் பல புதிய புதிய கற்கை நெறிகளை ஆரம்பிக்கின்றன. அவற்றைக் கற்று முடித்த பின்னர் அந்த மாணவ, மாணவியர் அக் கற்கை நெறி சார்ந்த தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு ஏற்ற வழிமுறைகள் எதுவும் அமைத்துக் கொடுக்கப்படவில்லை என்பது மனவருத்தத்திற்குரியது.

அரசுதான் நினைத்த வகையில் தனது அரசுக் கொள்கைகளுக்கு அமைவாக நியமனங்களை மேற்கொள்கின்றது. பல்கலைக்கழகங்கள் தம் வழியில் கற்கை நெறிகளை அறிமுகப்படுத்திக்கொண்டு செல்கின்றன.

ஒன்றுடன் ஒன்று தொடர்பு அற்ற நிலையில் மேற்கொள்ளப்படுகின்ற கல்வி முறைமை மாணவ, மாணவியரை நடுத்தெருவிற்கு கொண்டு செல்வதுடன், அரசின் பொருளாதார மேம்படுத்தல் கொள்கைகளும் வெற்றி பெறாமல் போகின்றன.

பிற நாடுகளில் இவ்வாறான மயக்க நிலை இல்லை என்றே சொல்லலாம். எந்த ஒரு கற்கை நெறிக்கும் ஏற்ற தொழில்களைப் பெற்றுக் கொள்வதற்கு அங்கு வசதிகள் பல உண்டு. அதனாலேயே இங்கிருந்து வெளிநாடுகளுக்குக் கற்றல் நடவடிக்கைகளுக்காகச் செல்கின்ற பல மாணவ, மாணவியர் மீண்டும் தமது நாட்டிற்குத் திரும்பி வந்து வேலை செய்யப் பின்னிற்கின்றார்கள்.

தமது கல்விக் கேற்ற தொழில்களை இங்கு பெறமுடியாது இருப்பதே இதற்குக் காரணம். - என மேலும் தெரிவித்தார். (உ)

# பொன்னாலை வரதராஜப் பெருமாளுக்கு நேற்றுக் கொடியேற்றம், செப். 12 தேர்







பொன்னாலை,ஓக.28

வரலாற்றுச் சிறப்பு மிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய ஏவிளம்பி வருட மஹோற்சவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நேற்று அதிகாலை இடம்பெற்ற விசேட பூசைகளைத் தொடர்ந்து 11.30 மணிக்கு கொடியேற்றம் இடம்பெற்றது.

நேற்றைய கொடியேற்றத் திருவிழாவில் ஈழத்தின் பலபாகங்களிலும் இருந்து வருகைதந்தஆயிரக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டனர்.


பக்தர்களின் வசதிகருதி தாகசாந்தி நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. மேலும், பொன்னாலை கண்ணன்மடாலயம்,பொன்னாலைச் சந்தியில் உள்ள நாராயணன்தண்ணீர்ப்பந்தல் சேவை போன்ற இடங்களில்அன்னதானம்வழங்கப்பட்டது. இந்தச் சேவை திருவிழாக் காலங்களில் தினந்தோறும் இடம்பெறும்.

இதேவேளை, ஆலயத்திற்குச் செல்லும் மக்களின் வசதி கருதி யாழ்ப்பாணம் –காரைநகர் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் அனைத்தும் நேற்று பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயப்பகுதி ஊடாகவே சேவைகளை மேற்கொண்டன. திருவிழா முடிவடையும் வரை இவ்வாறே சேவைகள் இடம்பெறவுள்ளன.

பக்தர்களின் நலன் கருதி வட்டுக்கோட்டைப் பொலிஸார் 24 மணிநேரப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## தாண்டிக்குளம் விபத்தில் இருவர் காயம்

வவுனியா தாண்டிக் குளத்தில் நேற்று மோட்டார் சைக்கிள் ஒன்று முன்னே சென்ற டிப்பர் வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்ட வேளையில் டிப்பருடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த மதுசன் (வயது – 23), நா.லோகேஸ்வரன் (வயது – 23) ஆகிய இருவரும்படுகாயமடைந்து வவுனியா பொதுவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (உ–100)




## ரஷ்யாவில் பாதுகாப்பு அதிகாரிகளுடன் இலங்கைப் பாதுகாப்புச் செயலர் பேச்சு



இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கபில வைத்தியரத்ன, ரஷ்யாவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அலெக்சாண்டர் போமின் தலைமையிலான உயர் மட்டப் பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

ரஷ்யாவில் 'இராணுவம் – 2017 எக்ஸ்போ' என்ற இராணுவத் தளபாடக் கண்காட்சி கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமாகியது.

இன்றுடன் நிறைவடையும் இந்தக் கண்காட்சியின் ஆரம்ப விழாவில் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கபிலவைத்தியரத்ன தலைமையிலான குழுவினர் பங்கேற்றிருந்தனர். இந்த கண்காட்சியின் ஒரு பக்க நிகழ்வாக, ரஷ்யாவின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அலெக்சாண்டர் போமின் தலைமையிலான உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகளை அவர் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அத்துடன், இராணுவ, தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான சமஷ்டி சேவைகள் அதிகாரிகளையும் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். (உ)

## குடிப்பதற்கு நீர் எடுக்க படையினர் தடை விதிப்பு

### முல்லை. கற்சிலைமடுவில் நிலைமை

முல்லைத்தீவு, ஓக.28

பொதுமக்கள் குடிப்பதற்கு கிணற்றில் இருந்து நீர் எடுக்கப் படையினர் தடை விதித்துள்ள சம்பவம் முல்லைத்தீவு கற்சிலைமடுவில் இடம்பெற்றுள்ளது.

தற்போது கடும் வரட்சி நிலவுவதால் மேற்படி கற்சிலைமடு மக்கள் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்கு பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில், தாங்கள் கடந்த காலங்களில் பயன்படுத்திய பொதுக் கிணறு ஒன்றில் இருந்து அவர்கள் தண்ணீரை எடுக்க முற்பட்டபோது அங்குள்ள படையினர் அதற்குத் தடை விதித்துள்ளனர் என்று கூறப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக அப்பகுதி மக்கள் கடும் விசனமடைந்துள்ளனர். அரச அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் இந்த விடயத்தில் தலையிட வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)

அமரர் அமிர்தலிங்கத்தின் 90ஆவது பிறந்த தின நினைவு

தோற்றம் 26 ★ 08 ★ 1927

மறைவு 13 ★ 07 ★ 1989



அமரர் அ.அமிர்தலிங்கம்
(தமிழர் தலைவர், இலங்கை நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர் 1977 - 1983)

தமிழ் இனத்தின் தளபதியாக, தலைவனாக 40 ஆண்டுகள் அயராது உழைத்து, மறைந்த அமிர் அண்ணனின் 90ஆவது பிறந்த தினத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த மொழி வழி மாநிலத்தில், தமிழ்த் தாயகத்தில் இறைமை, சுயநிர்ணய உரிமை, இணைப்பாட்சி (சமஷ்டி) அடிப்படையிலான சுயாட்சித் தமிழ் அரசை நிறுவுவோம் என உறுதி எடுத்துக் கொள்கின்றோம்.
"தமிழர்களின் தாகம்
தமிழ் ஈழத் தாயகம்"

எம்.கே.சிவாஜிலிங்கம்
தேசிய அமைப்பாளர்,
தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ),
வடக்கு மாகாண சபை உறுப்பினர்,
வல்வெட்டித்துறை நகர சபையின் முன்னாள் தலைவர்.

தொலைபேசி இலக்கம்: 0777 729020

(019)

## முள்ளிவாய்க்கால் துயிலும் இல்லம் சிரமதானம் மூலமாகத் துப்புரவு



முல்லைத்தீவு,ஓக.28

முல்லைத்தீவு – முள்ளிவாய்க்கால் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று சிரமதானம் மூலம் துப்புரவு பணி இடம்பெற்றது. முன்னாள் போராளிகளும் மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் மற்றும் பொதுமக்களும்இணைந்து இந்தப்பணியில்ஈடுபட்டனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில்தங்கள்உயிர்களைத் தியாகம் செய்த ஆயிரக்கணக்கானமாவீரர்களின் உடல்கள் மேற்படி முள்ளிவாய்க்கால்துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டன.

படையினர் அந்தப் பிரதேசத்தைக்கைப்பற்றிய பின்னர் துயிலும் இல்லம் கனரக வாகனங்களால் இடித்து அழிக்கப்பட்டது. தற்போது பற்றைகள் மண்டிக் காணப்பட்ட அந்த இடத்தில் நேற்றுச் சிரமாதானம் இடம்பெற்றது.

நேற்றுக் காலை முதல் அங்கு குழுமியவர்கள் இந்தப்பணியில்உணர்வுபூர்வமாகஈடுபட்டமையைக்காணக் கூடியதாக இருந்தது. (ம)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.08.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.